# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கு இலக்கு மற்றும் விழுமியங்கள் | 1 |
| நிதிசார் கண்ணோட்டம் | 3 |
| தலைவரின் செய்தி | 4 |
| இலங்கைப் பொருளாதாரம் ஒரே பார்வையில் | 8 |
| நிதிசார் மீள்நோக்கு | 9 |
| இடர் முகாமைத்துவம் | 14 |
| கூட்டுறவு ஆளுமை | 16 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 19 |
| நிதிக்கூற்றுகளுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு | 22 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 23 |
| கணக்காய்வு அவதானிப்புக்கள் மீதான தலைவரின் அபிப்பிராயங்கள் | 34 |
| திரட்டிய பரவலான வருமானம் தொடர்பான கூற்று | 43 |
| திரட்டிய நிதிசார் நிலைமை பற்றிய கூற்று | 44 |
| திரட்டிய நிதி ஓட்டக் கூற்று | 45 |
| திரட்டிய உரிமை மாற்றம் தொடர்பான கூற்று | 46 |
| திரட்டிய நிதிக்கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள் | 47 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்று | 61 |
| பத்து ஆண்டுகள் ஒரே பர்வையில் | 62 |
| பங்கு தகவல் | 63 |
| கூட்டுறவுத் தகவல் | 64 |

# நோக்கு

ஏனைய ஊடக ஆற்றல்களுடன் இலங்கையின் முன்னணி வாய்ந்த அச்சிடல் ஊடக நிறுவனமாகத் திகழ்கின்றது.

# இலக்கு

பிரதான செலுத்துநர் என்ற வகையில் தகவல்களைத் தெரிவிப்பதுடன், நாட்டில் மிக நம்பகமான மற்றும் உயர்தர ஊடக உற்பத்திகள்/ சேவைகளை மிக விருப்பத்துடன் வழங்குபவராக இந்த முன்னணி அச்சிடல் ஊடக நிறுவனம் மாற்றம் பெற்றுள்ளது. கலை தொழில்நுட்ப நிலையுடன் இணைந்து பரவலாக செய்திகளைச் சேகரிப்பதிலும் சந்தைப்படுத்தலிலும் கலை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேலான செயற்பாடு மற்றும் அடையாள பெறுமானத்தைத் திறமையாகப் பயன்படுத்துவதன் மூலமும் இதனை நாம் அடையவுள்ளோம். எமது வியாபாரத்துறையில் பெரும்பாலும் தேசிய நலனை வைத்து எமது சந்தைத் தலைமைத்துவம் மற்றும் இலாபகரத் தன்மையை நிலை நிறுத்துவதற்கும் தயக்கமின்றி ஊக்கத்துடனும் தெளிவாகவும் அறிந்து கொள்வதற்கும் நாம் ஊக்கம் பெற்றுள்ளோம்.

# விழுமியங்கள்

- கலாசாரம் : ஆக்கபூர்வமாகவும் கூட்டாகவும், திறமையாகவும் வாடிக்கையாளர்களை வழிநடாத்துவதன் மூலம் நாம் வெற்றி பெறுவோம்.
- வியாபாரம் : பல்வகைப்படுத்தப்பட்ட ஊடக மற்றும் சந்தை இடங்களின் அடுத்த தலை முறையினரை நாம் அபிவிருத்தி செய்வோம்.
- பத்திரிகைத்தொழில் : நம்பகமான மற்றும் உயர்தரமான உள்ளுரை மையமாகக் கொண்ட உள்ளீட்டை நாம் சமர்ப்பிப்போம்.
- சேவை : வாடிக்கையாளர்களுக்கு என்ன தேவை, எப்போது தேவை, எங்கு தேவை மற்றும் எப்படி அவர்களுக்குத் தேவை என்பதைத் தீர்மானிப்பதற்குரிய சுதந்திரத்தை நாம் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவோம்.
- தரம் : நிலையான மற்றும் வளர்ச்சி பெற்ற திறமையான செயற்பாடுகளுக்கு எமது செயற்பாடுகளின் எல்லாத் துறைகளிலும் சிறந்த முறையில் செயல்முறைப்படுத்துவதற்கு நாம் பாடுபடுவோம்.
- மனோதத்துவம் : எமது வியாபாரக் கருமங்களில் பெரும்பாலும் தேசிய நலனை நாம் வைத்திருப்போம்.
- குழு : நாம் மாற்றத்தை மதிப்பிட்டு உயர் செயற்பாட்டைக் கைமாறுவோம்.

# நிதிசார் கண்ணோட்டம்

| | | 2013 | 2012 | மாற்றம் | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| **வருமான கண்ணோட்டம் மற்றும் விகிதங்கள்** | | | | | |
| மொத்த புரள்வு | ரூபா ' 000 | 3,592,966 | 3,699,667 | (106,701) | (2.9) |
| வரி மற்றும் நியாயமான பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம் | ரூபா ' 000 | 73,074 | 57,429 | 15,645 | 27.2 |
| வரிக்குப் பின்னர் இலாபம் | ரூபா ' 000 | 58,945 | (8,280) | 67,225 | 811.9 |
| ஓர் ஊழியருக்குரிய மொத்த புரள்வு | ரூபா ' 000 | 1,887 | 1918 | (31) | (1.6) |
| ஓர் ஊழியருக்குரிய வரி மற்றும் நியாயமான பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம் | ரூபா ' 000 | 38 | 30 | 8 | 26.7 |
| தேசிய பொருளாதாரத்துக்குரிய வருமானம் | ரூபா ' 000 | 595 | 577 | (18) | (3.1) |
| முதலீடுகளிலிருந்து வருமானம் | ரூபா ' 000 | 14,460 | 14946 | (486) | (3.3) |
| நிதி செலவு | ரூபா ' 000 | 138,537 | 142044 | (3,507) | (2.5) |
| ஒரு பங்குக்குரிய வருமானம் | ரூபா. | 17 | (2) | 19 | 950.0 |
| மொத்த புரள்வு மீது வரி மற்றும் நியாயமான பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம் | % | 2.0 | 1.5 | 0.5 | 33.3 |
| தொழிற்பட்ட மூலதனம் மீது இலாபம் | % | 15.4 | (2.6) | 18.0 | 692.3 |

**ஐந்தொகை கண்ணோட்டங்கள் மற்றும் விகிதங்கள் (ஐந்தொகைத் திகதியன்றுள்ளவாறு)**

| | | 2013 | 2012 | மாற்றம் | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| மொத்த சொத்துக்கள் | ரூபா ' 000 | 2,038,612 | 2,022,647 | 15,965 | 0.8 |
| சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | ரூபா ' 000 | 326,537 | 372,570 | (46,033) | (12.4) |
| நீண்ட தவணை நிதி சொத்துக்கள் | ரூபா ' 000 | 135,362 | 137,397 | (2,035) | (1.5) |
| மொத்த சமநிலை | ரூபா ' 000 | 381,742 | 322,797 | 58,945 | 18.3 |
| வழங்கலில் உள்ள பங்குகளின் எண்ணிக்கை | '000 | 3,484 | 3,484 | - | - |
| ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் | ரூபா. | 110 | 93 | 17 | 18.3 |
| நடைமுறை விகிதம் | தடவைகள் | 1.6 | 1.4 | 0.2 | 14.3 |
| துரித விகிதம் | தடவைகள் | 1.1 | 1.00 | 0.1 | 10.0 |

# தலைவரின் செய்தி

த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்டின் (ANCL) பணிப்பாளர்கள் சபையின் சார்பாக கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் எமது செயற்பாடுகளின் மீள் நோக்குகளை எமது பங்குதாரர்களுக்குச் சமர்ப்பிப்பதில் நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

### பொருளாதார செயற்பாடு

தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளாக தனி எண் மட்டங்களில் தொடர்ந்து காணப்பட்ட பணவீக்க நிலைமைகளின் பொழுது வருடாந்த உண்மையான மொத்த உண்ணாட்டு உற்பத்தி (GDP) 7.3% வளர்ச்சியுடன் 2013இல் உறுதியாக மீள் நோக்கிச் செல்கின்ற இலங்கை பொருளாதாரம் ஆண்டு முடிவிற்குள் மேலும் தனி எண் ஸ்தானத்தை அடைந்து கொள்வதற்கு படிப்படியாக குறைவடையத் தொடங்கியது. பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளுக்கும் சாத்தியமான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளது. சாத்தியமான கால நிலைமைகள் மற்றும் வெளிவாரி தேவையில் படிப்படியான மீள் அறவீடு இந்த ஆண்டின் நான்கு காலாண்டுகளுக்கு மேலாக உறுதியான பொருளாதார வளர்ச்சியின் எழுச்சிக்கு துணைபுரிந்துள்ளது. சிறிய தொகை பதங்களில் யுஎஸ் டொலர் 67 மில்லியன் வரை 14.5% ஆல் வளர்ச்சி பெற்ற மொத்த உண்ணாட்டு உற்பத்தி 2013இல் யுஸ் டொலர் 3280 வரை ஒரு தலைக்குரிய மொத்த உண்ணாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது. உள்ளூர் மீன்சக்தி விலைகள், தீர்க்கதரிசன நாணய முகாமைத்துவம் மற்றும் வளர்ச்சியடைந்த உள்நாட்டு உணவு விநியோகத்திற்குரிய முக்கியமான சீராக்கலுக்கு மத்தியில் மத்திய பணவீக நிலைமை அதன் மிகக் குறைந்த மட்டத்திற்கு நிதானமான போக்கினைக் கொண்டுள்ளது.

2013இல் விரும்பிய மட்டத்தில் நாணய விரிவாக்கம் கடந்த ஆண்டில் இறுக்கமான நாணயக் கொள்கை மதிப்பீடுகளின் தாமதம் தாக்கத்தை ஏற்படுத்தகின்ற பொழுது தங்க அடிப்படையிலான முற்பணங்களில் அபரிமிதமான வீழ்ச்சி கொமர்ஷல் வங்கிகளினால் தனியார் துறையினருக்கு மிகக் குறைந்த கடன்பட்டு வாடா நிலைமையை ஏற்படுத்தியது.

தொடர்ச்சியான குறைந்த பணவீக்க நிலைமை பொருளாதார செயற்பாட்டை எளிதாக்குவதற்கு இந்த ஆண்டில் மேலும் நாயணக் கொள்கையை இலகுவாக்குவதற்கு அரசாங்கத்திற்கு அனுமதி யளித்துள்ளது. பாரிய ஏற்றுமதி சந்தைகளில் படிப்படியான அறவீட்டுடன் 2012இல் அரசாங்கத்தினால் கொள்கைகள் முன்வைக்கப்பட்டன. உத்தியோகபூர்வ ஒதுக்கங்களைக் கட்டியெழுப்புவதற்கும், நாணய-மாற்று விகித உறுதிப்பாட்டுக்குத் துணைபுரியக் கூடியதாக சென்மதி நிலுவையில் (BOP) குறிப்பிடப்பட்ட வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிஸ்கால் திரட்டலுக்கு அரசாங்கத்தின் தொடர்ச்சியான செயற்பாடு 2013இல் மேலும் பிஸ்கால் பற்றாக்குறையைக் குறைப்பதற்கும் மொத்த உண்ணாட்டு உற்பத்திக்குரிய கடனைக் குறைப்பதற்கும் உதவியளித்துள்ளது. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் புனரமைப்பு வேலைகள் பிஸ்கால் நிலைமையை மேலும் வளர்க்க முடிந்துள்ளது.

### கம்பனி செயற்பாடுகள்

அச்சிடல் மற்றும் இலத்திரனியல் ஊடக தொழிற்துறையில் உயர் போட்டி நிலைமை நிலவிய போதிலும் 2012ஆம் ஆண்டில் ரூபா 57 மில்லியன் இலாபத்திற்கு முரணாக 2013ஆம் ஆண்டில் வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் ரூபா 73 மில்லியன் இலாபத்தை ஈட்டக் கூடியதாக இருந்துள்ளது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆண்டில் கம்பனி மொத்த இலாப விகிதத்தில் 2% வளர்ச்சி மற்றும் செயற்பாட்டு இலாபத்தில் 6% வளர்ச்சியையும் காட்டியுள்ளது. ஆனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடு கையில் நிதி செலவு 2% குறைவைக் காட்டுகின்றது. நிதி செலவைக் குறைப்பதற்கு தொழிற்படு மூலதனத்தின் முகாமைத்துவத்திற்காக ஏற்கனவே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஆண்டில் எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முழுமையான பைண்டர் மெஷின் மற்றும் வருங்காலத்தில் முக்கியமான பங்களிப்பைச் செலுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற வர்த்தக அச்சிடல் பிரிவைப் பலப்படுத்துவதற்கு இந்த ஆண்டில் பொழுது ஒஸாக்கா ஸேட்டில் தையல் இயந்திரத்திற்கான 2 காகிதம் அளிக்கும் பகுதிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 21 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

கடுமையான போட்டிக்கு மத்தியிலும் நாட்டில் பிரதான பிரசுரிப்பாளர் என்ற வகையில் "ANCL" விளம்பரம் மற்றும் விநியோகத்திற்கான சந்தையில் அதன் பங்கினை வளர்ச்சியடையச் செய்யக்கூடியதாக இருந்துள்ளது. ''ஏஎன்சிஎல்'' வாடிக்கையாளர்களின் சிந்தனைகளில் கட்டியெழுப்புவதற்கு அடையாள உருவத்தை மேம்படுத்துவதில் அமுல்படுத்தப்பட்ட ஆக்கபூர்வமான கூட்டுறவு உபாயங்களின் பிரதான சாத்தியப்பாடு காரணமாக இந்நிலைமையை அடையக்கூடியதாக இருந்துள்ளது.

# தலைவரின் செய்தி

## விளம்பரம்

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் இலத்திரனியல் மற்றும் அச்சிடல் ஊடகத்திலிருந்து பரவலான போட்டி நிலமைக்கு த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் முகம்கொடுக்கக்கூடியதாக இருந்துள்ளது. 2012ஆம் ஆண்டில் எல்லை ரீதியாக குறைவைக் காட்டிய போதிலும் கம்பனி 2013ஆம் ஆண்டில் ரூபா 2280 மில்லியன் வருமானத்தைப் பதிவாக்கியுள்ளது. ஏனைய கம்பனிகளிலிருந்து பாரிய போட்டிக்கு மத்தியிலும் அச்சிடல் ஊடகத்தில் விளம்பரத்துறையில் தலைமையை நாம் தேக்கி வைக்கக்கூடியதாக இருந்துள்ளோம்.

இந்த ஆண்டு பகுதியில் மொபைல் தொலைபேசிகள் ஊடாக சண்டே ஒச்சேர்வர் மற்றும் சிலுமின பத்திரிகைக்கு தமது சிறு விளம்பரங்களை அனுப்புவதற்தால் எளிதாக்குவதற்கு முன்னணி வாய்ந்த மொபைல் சேவை வழங்குநர்களுடன் ஏஎன்சிஎல் இதனை அறிமுகப்படுத்தியுள்ளது.

திறமையாகவும் காரிய சித்தியுடனும் விளம்பர வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றும் வகையில் 2013ஆம் ஆண்டின் பொழுது வாடிக்கையாளர் மயப்படுத்திய பரவலான துணை மார்க்கம் ஆரம்பிக்கப்பட்டது.

## விநியோகம்

நாம் 3 பிரதான தினசரி புதினப் பத்திரிகைகளையும், 3 பிரதான வாராந்த புதினப் பத்திரிகைகளையும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் பிரசுரிக்கின்றோம். 2013 டிசம்பர் 31அன்றுள்ளவாறு 28 மொத்த பக்க ஏடுகளைக் கொண்ட பல்வேறு வாசிப்பு குழுவினரின் ஆர்வத்தை சக்தியூட்டுகின்ற மையமாகக் கொண்ட உற்பத்தி பக்க ஏடு 17 பருவ வெளியீடுகளையும் மற்றும் 5 சஞ்சிகைகளையும் உள்ளடக்குகின்றது. 2013ஆம் ஆண்டில் தற்பொழுது மிகத் திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்ற ஆலோகோ உடாபாடி, முத்து அஹுரா-1, முத்து அஹுரா-2, முத்து அஹுரா-3, முத்து அஹுரா-4 மற்றும் புது சுவந்த என்ற பெயரில் கம்பனி 6 புதிய பருவ வெளியீடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த எல்லாப் பிரசுரங்களும் 2012இல் ரூபா 674 மில்லியனுடன் ஒப்பிடு கையில் 2013ஆம் ஆண்டில் ரூபா 691 மில்லியன் மொத்த விநியோக வருமானத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இந்த எல்லா பிரசுரங்களும் பெரும்பாலும் எமது சொந்த வாகனங்கள், உப ஒப்பந்தத்தில் அமர்த்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களையும் பயன்படுத்தி நாடுபூராகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சந்தை பிரவேசத்தை வளர்ப்பதில் நாம் நாடுபூராகவும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் கருத்தரங்குகள், க.பொ.த. (சா.த) கருத்தரங்குகள், சுகாதார முகாம்கள், இசைக் கச்சேரிகளையும் நாம் நடாத்தியுள்ளோம். இவை பாடசாலை மாணவ, மாணவிகளிடையேயும் பொதுமக்களிடையேயும் மிகப் பிரசித்தம் பெற்றுள்ளன. பரந்த வாசிப்பு முறை மற்றும் திறமையான செய்திகள் சென்றடைவதையும் உருவாக்குகின்ற எமது இலக்குடன் பரவலான உள்ளீடு மற்றும் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கு நாம் எமது பத்திரிகை நிருபர்கள் மற்றும் விளம்பர முகவர் நிலைய வலைப்பின்னலையும் ஒழுங்கான முறையில் பூர்த்தி செய்துள்ளோம்.

## வர்த்தக அச்சிடல்

கம்பனியின் வர்த்தக அச்சிடல் பகுதி (CPD) கடந்த ஆண்டுகளில் நவீன மெஷின்களுடன் தமது தொழில்நுட்ப ஆற்றலை விரிவுபடுத்தியுள்ளது. சம்பூரணமான கட்டும் இயந்திராதி மற்றும் 2 காகிதம் அளிக்கும் பகுதிகள் ஸேட்டில் தையல் இயந்திரம் ஆக்கத்திறனை உயர்த்தியுள்ளதுடன், உரிய நேரத்தில் விநியோகத்தை உறுதிப்படுத்தியுள்ளது. CPD ஸ்ரீலங்கா டெலிகொம்மின் தேசிய தொலைபேசிக் கோவை மற்றும் இலங்கை கல்வித் திணைக்களத்துக்கு அரசாங்க பாடசாலைகளில் பாடப் புத்தகங்களை அச்சிடுதல் போன்ற பாரிய வர்த்தக ஓடர்களை பொறுப்பேற்றுள்ளது.

## வர்த்தக அச்சிடல் பகுதி

2013ஆம் ஆண்டின் பொழுது ரூபா 598 மில்லியன் மொத்த புரள்வைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

## உற்பத்தி

இலங்கையில் முதற் தடவையாக மொபைல் சாதனங்கள் ஊடாக சண்டே ஒப்சேர்வர் மற்றும் சிலுமின பத்திரிகைகளுக்கு தமது சிறு விளம்பரங்களை அனுப்புவதற்கு அதன் பாவனையாளர்களை இலகுபடுத்துவதற்கு முன்னணி வாய்ந்த மொபைல் சேவை வழங்குநர்களாகிய டயலொக், மொபிட்டெல், எடிஸலாட் மற்றும் எயார் டெல் போன்றவற்றுடன் கம்பனி குறிப்பிடத்தக்க முறையில் இதனை கையாளுகின்றது. # 429 # ஐ டயல் பண்ணுவதன் மூலம் அறிவுறுத்தல்களைப் பின்பற்றினால் திரையில் தோன்றுகின்றது.

மொபைல் பாவனையாளர்கள் நாட்டில் எப்பாகத்தில் இருந்தும் தினத்தின் எந்த வேளையிலும் தமது விளம்பரத்தை இடம்பெறச் செய்வதற்கு ஏஎன்சிஎல் உடன் இணைந்து கொள்ளும் தெரிவு வழங்கப்பட்டுள்ளது.

# தலைவரின் செய்தி

பாரிய விளம்பர சர்ச்சை பரிமாணத்தைக் கையாளுவதற்கு மிகத்திறமையான மற்றும் நடைமுறையில் மற்றும் உதவி மார்க்கம் தவிர (1949) அர்ப்பணிக்கப்பட்ட வாடிக்கையாளர் கவனிப்பு நிறைவேற்றுத் தரத்திலுள்ளவர்களுடன் 2013 ஜுலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள எந்தவொரு தொலைத்தொடர்பாடல் வலைப்பின்னலிலிருந்து 1949 ஐ டயல் பண்ணுவதன் மூலம் கட்டணம் தொட்டு கொள்கைகள் மற்றும் மேம்பாடுகள் வரை ஏஎன்சிஎல் விளம்பரம் தொடர்பான விடயங்களை சீர்படுத்துகின்ற தெரிவை வாடிக்கையாளர்கள் கொண்டுள்ளனர். கிட்டத்தட்ட சுமார் 40 - 50 அழைப்புக்கள் ஒரு நாளையில் ‘1949’ இற்குக் கிடைக்கின்றன. இவை பெரும்பாலும் விளம்பரம் மற்றும் சில ஆசிரியர் பீடம் தொடர்பானவையாகும்.

டெய்லி நியூஸ் இணையத்தளங்கள் அதிக பாவனையாளர் சௌகரியத்தை உருவாக்குவதற்கும் சில நவீன வடிவமைக்கப்பட்ட போக்குகள் மற்றும் ஒத்துழைப்பு சிறப்பம்சங்களைக் கவனத்திற் கொள்வதன் மூலம் இணைப்பை ஏற்படுத்துகின்றது. இதன் பயனாக பக்க வருகைகள் www.dailynews.lk உலகளாவிய பிரசன்னம் கண்டிப்பான உறுதிப்பாட்டை அதிகரித்துள்ளது.
ANCL இன் புதின பத்திரிகை முகவர் நிலைய வலைப்பின்னல் மற்றும் கிளை அலுவலக சேவை இலத்திரனியல் ஒதுக்கம் மாதிரி இணைக்கப்பட்ட எட்புரோ 2013இல் 16 மேலதிக இடங்களில் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிக்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. இது சில நிமிடங்களில் ஏஎன்சிஎல் விளம்பர முறையுடன் தமது விளம்பரங்களை நேரடியாக இடவசதி ஒதுக்கக்கூடியதாகவுள்ளது.

விளம்பரதாரர்களுக்கு மேலதிக மைல் கல்லை வழங்குவதற்கு ஒப்சேர்வர் ADZ பிரசுரம் ஆரம்பிக்கப்பட்டது. சண்டே ஒப்சேர்வர் ADZ சஞ்சிகையில் பிரசுரிக்கப்படுகின்ற விளம்பரங்கள் ஆட்டோ மொபைல், வீடு சொத்து, கணனி போன்கள், சுகாதாரம் முதலிய www.adz.lk போன்ற பிரதான வகைகளின் கீழ் adz.lk இல் வாராந்தம் பட்டியலிடப்படுகின்றன. டெய்லி நியூஸ், தினமின மற்றும் சண்டே ஒப்சேர்வரில் அவதானிக்கப்பட்டவை வெற்றி கொள்ளப்பட்ட பின்னர் 2013 ஏப்ரிலில் சிலுமின ஆசிரியர் பீடத்துக்கு சுதந்திரமான தீர்வு நீடிக்கப்பட்டுள்ளது. பாவனையாளர்களுக்கு பயிற்சி அமர்வுகளின் பின்னர் அமுலாக்கல் நிறைவேற்றப்பட்டுள்ளது. பக்கங்களுக்கு எண்ணிடுதல் ஊடாக முழுமையான சிலுமின சுதந்திர முறை வேலை ஓட்டம் 2013 ஜுலைக்குள் பூர்த்தியடைந்துள்ளது. லிபர்டி சொப்ட்வெயாருக்கு அனுமதி கொடுப்பதில் ரூபா 3.7 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## கூட்டுறவு சமூக பொறுப்பு / கூட்டுறவு ஆளுமை

கூட்டுறவு ஆளுமை முன்னணி வாய்ந்த அச்சிடல் ஊடக கம்பனி என்ற வகையில் எமது பங்குதாரர்களாகவுள்ள பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை நாம் கருத்திற் கொண்டுள்ளோம். இக்காலப்பகுதியில் கம்பனி தேசத்திற்கு மகுடம் கண்காட்சி, மிஹிந்தலை ஆலோக பூசை, வெசாக் அமாதஹார, பாடசாலை சிறுவர் கிரிகெட் வீரர் மிகப் பிரசித்தம் வாய்ந்த ரக்பி விளையாட்டு வீரர் போட்டி முதலானவற்றை நிறைவேற்றியுள்ளதுடன் பங்கெடுத்துமுள்ளது.

கூட்டுறவு ஆளுமைக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம். அத்துடன் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் மற்றும் பிணைவர்த்தனை ஆணைக்குழுவின் பட்டியலிடும் சட்டங்களுக்கு கட்டுப்படுகின்ற பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து மிகவும் வேறுபடாதிருக்க கம்பனி முகாமைத்துவத்துக்கு பாடுபடுகின்றது,

## ஊழியர் நலன்புரி

மகிழ்ச்சியுள்ள பூரணத்துவம் கொண்ட சக ஊழியர்களினூடாகவே உற்பத்தித் திறன் கொண்ட சேவையை கம்பனியினால் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெளிவாக விளங்கியுள்ளது. இந்த நோக்கத்தைப் பலப்படுத்தும் நோக்கில் வழமையான சேமநல செயற்திட்டங்களை ஊழியர்களுக்கு கம்பனி வழங்கியுள்ளது. இதன் செயற்பாட்டில்கம்பனி ஊழியர்களுக்கு வருடாந்த போனஸ், வெளி மருத்துவ சேவை, மருத்துவ காப்புறுதித் திட்டம் கடன் வசதிகள் சிங்கள, இந்து புத்தாண்டுகளுக்கான ஊழியர்களின் பிள்ளைகளுக்கு நன்கொடை வவுச்சர்கள், பாடப் புத்தகங்கள், பாடசாலை சீருடைத் துணிகள், பாதணிகள் மற்றும் ஊழியர்களின் பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளுக்கு அவர்களது கல்வியில் ஒத்துழைப்புக்கு பாடசாலை பைகளையும் வழங்குகின்றது.

புதிய புத்தக பிரசுரங்களை வாசிப்பதற்கு பத்திரிகையாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் குழாமிற்கான தேவையை அங்கீகரிப்பதன் பயனாக ஒரு பத்திரிகையாளருக்கு ரூபா 5000/- மற்றும் செப்டெம்பர் மாதத்தில் இலக்கிய மாதத்தில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கான ஏனைய உத்தியோகத்தர் குழாம் அங்கத்தவர்களுக்கு ரூபா 1500/- கம்பனி பண உதவி அளித்துள்ளது.

## வருங்காலம்

நாம் மேற்கொண்டுள்ள முதலீடுகள் மற்றும் பெற்றுக்கொண்ட அனுபவத்தையும் கருத்திற்கொண்டு

# தலைவரின் செய்தி

வருங்காலத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோம். புதினப் பத்திரிகை அச்சிடல் தொழிலில் காண்பிக்கப்பட்டுள்ள பாரிய போட்டிக்கு முகம்கொடுப்பதற்கு உயர்தரமான அச்சிடல் அச்சகம் நன்கு உணரப்பட்டுள்ளது.

சபையிலுள்ள எமது சகபாடிகள் மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் ஆதரவுடனும் 2014ஆம் ஆண்டில் ஒன்றுபட்ட உறுதியாக நிற்கக்கூடியதாக இருக்க முடியுமென நான் நம்புகின்றேன்.

**பாராட்டுரை**

லேக் ஹவுஸின் வரலாற்றுக் குறிப்பில் குறிப்பிடத்தக்க ஒரு மைல் கல்லாக 2014ஆம் ஆண்டில் எல்லாப் பங்குதாரர்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புக்களை நான் பணிப்பாளர்கள் சபையின் சார்பாக நன்றியுணர்வுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

லேக் ஹவுஸ் தொடர்ச்சியான ஊக்கமளிக்கப்பட்ட மற்றும் முன்னணி வாய்ந்த அதிகாரம் பெற்ற சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் உயர் நேர்மையும், ஊக்கமும் ஆக்கத்திறன் கொண்ட சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் தலைவர் என்ற முறையில் கம்பனியை ஓட்டிச் செல்வதில் சவால்களை எதிர்கொள்ளும் நிலைமைகளின் கீழ் வெற்றிகரமான செயற்பாட்டின் மற்றுமோர் ஆண்டை வழங்குவதற்கு எனது குழுவில் வைத்துள்ள நம்பிக்கை மீது எமது சகபாடிகளிடமிருந்து பூரண ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலையும் நான் பெற்றுள்ளேன்.



**பந்துல பத்மகுமார**
தலைவர் மற்றும் முகாமைத்துப் பணிப்பாளர்

# இலங்கையின் பொருளாதாரம் ஒரே பார்வையில்

## பிரதான பொருளாதார சுட்டிக்காட்டிகள்

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013(a) |
|---|---|---|---|---|---|---|
| **மக்கள் தொகை இயல்** | | | | | | |
| நடு ஆண்டு சனத்தொகை ('000 நபர்கள்) | 20,217 | 20,450 | 20,653 | 20,869 | 20,328 | 20,483 |
| சனத்தொகை வளர்ச்சி (%) | 1.1 | 1.1 | 1.0 | 1.0 | 0.9 | 0.8 |
| தொழில் சக்தி ('000 நபர்கள்) | 8,082 | 8,074 | 8,108 | 8,565 | 8,454 | 8,802 |
| வேலையற்றோர் விகிதம் (தொழில் சக்தியின் %) | 5.4 | 5.8 | 4.9 | 4.2 | 4 | 4.4 |
| **வெளியீடு** | | | | | | |
| நடைமுறை சந்தை விலைகளின் மொத். உண்ணாட்டு உற்பத்தி (ரூபா பில்லியன்) | 4,411 | 4,835 | 5,604 | 6,543 | 7,579 | 8,674 |
| சந்தை விலைகளில் ஒரு தலைக்குரிய மொத்த உண்ணாட்டு உற்பத்தி (ரூபா) | 218,167 | 236,445 | 271,346 | 313,542 | 372,814 | 423,467 |
| **அசல் வெளியீடு (% மாற்றம்)** | | | | | | |
| **மொத்த உண்ணாட்டு உற்பத்தி** | 6.0 | 3.5 | 8.0 | 8.2 | 6.3 | 7.3 |
| **விலைகளும் கூலிகளும் (% மாற்றம்)** | | | | | | |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2002 = 100) - வருடாந்த சராசரி | 22.6 | 3.4 | 5.9 | - | - | 0 |
| எல்லா சம்பளச் சபைகளிலுள்ள தொழிலாளர்களுக்கான நியமிக்கப்பட்ட வேதன விகிதம் சுட்டெண் | 25.6 | 4.9 | 32.0 | 4.6 | 22.2 | 5.7 |
| **நாணையமாற்றும் விகிதங்கள்** | | | | | | |
| வருடாந்த சராசரி ரூபா/யுஎஸ் $ | 108.33 | 114.94 | 113.06 | 110.57 | 127.60 | 129.11 |
| வருட முடிவில் ரூபா/யுஎஸ் $ | 113.14 | 114.38 | 110.95 | 113.90 | 127.16 | 130.75 |
| **வட்டி விகிதங்கள் (வருட முடிவில் ஓர் ஆண்டுக்குரிய(%)** | | | | | | |
| மீள் கொள்வனவு விகிதம் (முன் இரவில்) | 10.50 | 7.50 | 7.25 | 7.00 | 7.50 | 6.50 |
| மாறுபட்ட மீள் கொள்வனவு விகிதம் (முன் இரவில்) | 12.00 | 9.75 | 9.00 | 8.50 | 9.50 | 8.50 |
| திறைசேரி உண்டியல் விகிதம் 91 நாட்கள் | 17.33 | 7.73 | 7.24 | 8.68 | 10.00 | 7.54 |
| 364 நாட்கள் | 19.12 | 9.33 | 7.55 | 9.31 | 11.69 | 8.29 |
| **வைப்பு விகிதம்** | | | | | | |
| வர்த்தக வங்கியின் சராசரி அமைக்கப்பட்ட வைப்பு விகிதம் (AWDR) | 11.63 | 8.01 | 6.23 | 7.24 | 10.10 | 9.37 |
| வர்த்தக வங்கிகளின் 12 மாத நிலையான வைப்பு (ஆகக்கூடிய) | 20.25 | 22.00 | 17.00 | 11.00 | 17.00 | 16.00 |
| **கடன் கொடுத்தல் விகிதம்** | | | | | | |
| வர்த்தக வங்கிகளின் சராசரி அமைக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் விகிதம் (AWPR) | 18.50 | 10.91 | 9.29 | 10.77 | 14.40 | 10.13 |
| **மூலதன சந்தை** | | | | | | |
| எல்லா பங்கு விலை சுட்டெண் (1985 = 100) | 1,503.0 | 3,385.6 | 6,635.9 | 6,074.4 | 5,643.0 | 5,912.8 |
| மைலங்கா விலை சுட்டெண் (1998 டிசம். = 1000) | 1,631.3 | 3,849.4 | 7,061.5 | 5,229.2 | 5,119.1 | 0 |
| S & P SL 20 சுட்டெண் | | | | | 3,085.3 | 3,263.9 |
| சந்தை மூலதன மயமாக்கல் (ரூபா பில்லியன்) | 488.8 | 1,092.1 | 2,210.5 | 2,213.9 | 2,167.6 | 2,459.9 |

(அ) தற்காலிகமானது

# நிதிசார் மீள்நோக்கு

## 1) செயற்பாட்டு விளைவுகள்

2013இல் குருப் வரி மற்றும்நியாய பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் ரூபா 73.1 மில்லியன் வருமானத்தை அடைந்துள்ளது. 2012 நிதிசார் விளைவுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 15.7 மில்லியன் அதிகரிப்பைக் கொண்டுள்ளது. பாடசாலை பாடப்புத்தக அச்சிடலில் இருந்து வர்த்தக அச்சிடல் வருமானம் பிரதானமாக குறைவடைந்ததன் காரணமாக ரூபா 106.7 மில்லியனால் வருமானம் குறைவடைந்துள்ளது. வர்த்தக அச்சிடல் வருமானம் வீழ்ச்சி காரணமாக பிரதானமாக விற்பனைச் செலவு குறைவடைந்துள்ளது. நானாவித விற்பனைகள் காரணமாக ஏனைய வருமானம் முக்கியத்துவம் வாய்ந்த அதிகரிப்பைக் காட்டுகின்றது. கடந்த ஆண்டில் விநியோக செலவினங்கள் அதே மட்டங்களை கொண்டிருந்த பொழுது நிருவாகச் செலவினங்கள் 2%ஆல் அதிகரித்துள்ளது. எல்லை, கழிக்கப்பட்ட நிதிசார் செலவினங்கள் எதிர்காலத்தில் ஒரு சாத்தியமான போக்கினைக் குறிப்பிடுகின்றது.

### செயற்பாட்டு விளைவுகளின் பகுப்பாய்வு

| விடயம் | 2012 ரூபா மில் | 2013 ரூபா மில் | மாற்றம் % |
|---|---|---|---|
| வருமானம் | 3,699.7 | 3,593.0 | -3 % |
| விற்பனைச் செலவு | (1,993.4) | (1,873.2) | -6 % |
| மொத்த இலாபம் | 1,706.3 | 1,719.8 | 1 % |
| ஏனைய வருமானம் | 105.7 | 137.7 | 30 % |
| நிருவாக செலவினங்கள் | (1,289.0) | (1,320.0) | 2 % |
| விநியோக செலவினங்கள் | (323.5) | (325.9) | 1 % |
| நிதிச் செலவினங்கள் | (142.1) | (138.5) | -3 % |
| வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம் | 57.4 | 73.1 | 27 % |



# நிதிசார் மீள்நோக்கு

## 2) வருமானம்

### மொத்த வருமானம்

இந்த ஆண்டுக்கான மொத்த வருமானம் கீழே வகுக்கப்பட்டுள்ளவாறு 2012 இற்குப் புறம்பாக 3% பாதகமான வளர்ச்சியுடன் ரூபா 106.7 மில்லியனால் குறைவடைந்துள்ளது.

| விடயம் | 2012 ரூபா மில் | 2013 ரூபா மில் | மாற்றம் ரூபா மில். | மாற்றம் % |
|---|---|---|---|---|
| விளம்பர வருமானம் | 2,296.1 | 2,280.4 | -15.7 | -1% |
| விநியோக வருமானம் | 674.4 | 690.8 | 16.4 | 2% |
| வர்த்தக அச்சிடல் வருமானம் | 721.9 | 597.6 | -124.3 | -17% |
| வருடாந்த பிரசுர வருமானம் | 6.7 | 3.9 | -2.8 | -42% |
| டிஜிட்டல் பிரிண்டிங் | 0 | 3.8 | 3.8 | 0% |
| இன்போ மீடியா (பிரைவட்) லிமிடெட் | 0.6 | 0 | -0.6 | -100% |
| பிஸ்னஸ் லங்கா ஏஎன் (பிரைவேட்) லிமிடெட் | 0 | 16.5 | 16.5 | N/A |
| **மொத்த வருமானம்** | **3,699.7** | **3,593.0** | **-106.7** | **-3%** |




### விளம்பர வருமானம்

கம்பனியின் பாரிய வருமான மூலமாகிய விளம்பர வருமானம் 2013இல் ரூபா 15.7 மில்லியன் குறைவைக் கொண்டு 1% பாதகமான வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றது.



**விநியோக வருமானம்**

எழுச்சி பெற்று வருகின்ற தொழில்நுட்ப அபிவிருத்திகள் சவால்களைக் கொண்டிருந்த போதிலும், 2013இல் கம்பனி விநியோக வருமானம் குறிப்பிடத்தக்க எல்லை வளர்ச்சியை அடையக்கூடியதாக இருந்துள்ளது.




**வர்த்தக அச்சிடல் வருமானம்**

கடந்த சில ஆண்டுகளுக்கு மேலாக எமது வர்த்தக அச்சிடல் பிரிவின் ஆற்றல் மற்றும் தரத்தை நாம் விரிவுபடுத்தியுள்ளோம். அத்துடன் அரசாங்க பாடசாலை பாடப் புத்தகம் அச்சிடல் கேள்வி மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் தேசிய தொலைபேசி விபரக்கோவை அச்சிடல் வேலையின் பிரமாண்டமான பரிமாணத்தை நாம் அடையக்கூடியதாக இருந்துள்ளோம்.

வெளிவாரி வேலைகளிலிருந்து ஒரு பகுதியாக வர்த்தக அச்சிடல் பகுதி கம்பனியின் புதினப் பத்திரிகைகளுக்குப் பெறுமதி சேர்த்துள்ளதுடன் இப்பிரிவின் மொத்த புரள்வு பெறுபேறு பின்வருமாறு

| விடயம் | 2012 ரூபா மில் | 2013 ரூபா மில் | மாற்றம் % |
|---|---|---|---|
| வெளிவாரி வருமானம் | 448.8 | 294.5 | -34% |
| உள்ளக வருமானம் | 277.1 | 303.1 | 9% |
| **மொத்த வருமானம்** | **721.9** | **597.6** | **-17%** |



## 3) விற்பனைச் செலவு

கம்பனியின் விற்பனைச் செலவு பகுப்பாய்வு பின்வருமாறு

| வியாபாரத்தின் பிரிவு | 2012 ரூபா மில் | 2013 ரூபா மில் | மாற்றம் % |
|---|---|---|---|
| புதினப் பத்திரிகைகள் | 1,389.2 | 1,413.4 | 2 % |
| வர்த்தக அச்சிடல் | 593.8 | 447.8 | -25 % |
| ஏனையவை | 10.4 | 12.0 | 15 % |
| **மொத்தம்** | **1,993.4** | **1,873.2** | **-6 %** |

வியாபார பரிமாணம் குறைவடைந்ததன் காரணமாக வர்த்தக அச்சிடல் பிரிவின் விற்பனைச் செலவு 2013இல் ரூபா 146 மில்லியன் தொகையுடன் 25 % ஆல் குறைவடைந்துள்ளது.




புதினப் பத்திரிகைப் பிரிவின் விற்பனைச் செலவு பகுப்பாய்வு பின்வருமாறு:






## 4) செலவினங்கள்

கீழேயுள்ள பகுப்பாய்வு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 29.5 மில்லியனால் மாத்திரம் அதிகரிக்கப்பட்டு 2% அதிகரிப்பை பதிவு செய்துள்ளமையைக் குறிப்பிடுகின்றது.

| விடயம் | 2012 ரூபா மில் | 2013 ரூபா மில் | மாற்றம் ரூபா மில். | மாற்றம் % |
|---|---|---|---|---|
| நிருவாக செலவினங்கள் | 1,289.0 | 1,320.0 | 31.0 | 2% |
| விநியோக செலவினங்கள் | 323.5 | 326.0 | 2.5 | 1% |
| நிதி செலவினங்கள் | 142.0 | 138.0 | -4.0 | -3% |
| **மொத்த செலவினங்கள்** | **1,754.5** | **1,784.0** | **29.5** | **2%** |



# இடர் முகாமைத்துவம்

## தற்பொழுது எமது வியாபார செயற்பாட்டின் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட பாகம்

சந்தைப் பொருளியலில் போட்டியின் தவிர்க்க முடியாத மூலகமாக இடர் முகாமைத்துவம் விளங்குகின்றது. கம்பனியின் குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்கின்ற பொழுது ஆண்டுகள் தோறும் உண்மையான வளர்ச்சியை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் இடர்பாடுகளை முகாமைத்துவப்படுத்தல் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கின்றது. பயன்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் எடுக்ககப்பட்ட நடவடிக்கைகளின் திறமையை மீள்மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்பு வாய்ந்த கம்பனி என்ற வகையில் நாம் பல வகையான இடர்பாடுகளை மீள் மதிப்பீடு செய்யக்கூடி நிலையிலும் முடிவு முதலீடு மற்றும் செயற்பாடுகளில் எடுப்பதற்கு இதன் விளைவுகளை கூட்டிணைக்கக்கூடியதாகவும் உள்ளோம்.

இன்று, இடர் முகாமைத்துவம் நிதிசார் அல்லது வசதிகளுக்கான சமனான முக்கியத்துவத்தை வைத்து எமது முறையான முகாமைத்துவ நடைமுறைகளின் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட பாகமாக விளங்குகின்றது. கம்பனியின் இடர் முகாமைத்துவ முறையில் பேசப்படுகின்ற பாரிய இடர்பாடுகள் பின்வருமாறு:

### (1) கடன் இடர்பாடு முகாமைத்துவம்

கடன் இடர்பாடு என்பது கம்பனியின் கடன்பட்டோர் உடன்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தத் தவறியதனால் எழுகின்ற கணிசமான நிதி இழப்பையே குறிக்கின்றது. கடன் சேகரிப்பு செயற்பாட்டைக் குறைக்க முடியுமான காரணிகளிடையே சந்தையில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார பின்னடைவு சரியான வட்டி விகிதங்களில் அதிகரிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

முறையான மீள் மதிப்பீட்டின் பின்னர் அனுபவமும், தராதரமும் பெற்ற சக ஊழியர்களினால் கடன் அங்கீகாரம் செய்யப்படுகின்றது. கடன் அங்கீகாரத்திற்காக வித்தியாசமான அதிகார மட்டத்தைக் கொண்டுள்ளோர் ஒன்று திரட்டப்படுகின்றனர். வாடிக்கையாளரிடமிருந்து மேலதிக பாதுகாப்புக்காக உத்தரவாதக் கடிதம், வைப்புக்கள் போன்ற பிணைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. கடன் நடைமுறைகள் ஒழுங்காகப் பின்பற்றப்படுகின்றன. அத்துடன் சந்தேக கடன்பட்டோர்களுக்காக போதுமான ஒதுக்கம் செய்யப்படுகின்றன.

### (2) செயற்பாட்டு இடர் முகாமைத்துவம்

மனித தவறுகள், பொருத்தமற்ற அல்லது பிழையான உள்ளக செயற்பாடுகள், முறை தவறுதல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு மீறல்கள், மோசடி, சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் இணைக்கப்பாட்டின்மை அல்லது கண்ணுக்குப் புலப்படாத துரதிர்ஷ்ட விளைவுகள் போன்ற வெளிவாரி காரணங்களின் விளைவாக ஏற்படுகின்ற இழப்புக்களில் இடர்பாடுகள் செயற்பாட்டு இடர்பாடு என அழைக்கப்படுகின்றது. கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட பாகமாகிய உள்ளக கணக்காய்வுப் பகுதி கணக்காய்வுக்குழுவுக்கு அறிவிக்கின்றது. உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளின் போதிய நிலையைப் பின்பற்றுதல் கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு பகுதியினால் தொடர்ந்து மீள்நோக்கப்படுகின்றது.

கம்பனியின் உருவமுள்ள சொத்துக்கள் இனம் காணப்பட்ட இடர்பாடுகளுக்கு முரணாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. சகல காப்புறுதிக் கொள்கைகளும் வருடாந்த மீள் மதிப்பீடு மற்றும் மீள் நோக்கு உட்பட்டதாகும்.

### (3) சட்ட இடர் முகாமைத்துவம்

ஏஜன்சிஎல் அதன் சாதாரண வியாபாரக் கருமங்களில் சட்ட ரீதியான வழக்குகள், சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கோரிக்கைகளுக்குட்பட்டதாக விளங்குகின்றது. இந்த எல்லா விவகாரங்களும் இடர்பாடுகள் மற்றும் நிச்சயமற்ற தன்மை கொண்டவையாக விளங்குகின்றன. அத்துடன் எந்தவொரு நிச்சய மட்டத்துடன் வெளிப்பாட்டைத் தீர்க்கத்தரிசனம் செய்ய முடியாதுள்ளது. இடர்பாட்டைக் குறைப்பதற்கு கம்பனியின் எல்லா செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுக்கும் சட்டம் மற்றும் அரச நியதி தேவைகளுடன் இணக்கமுடையவை என்பதை சட்டப்பகுதி உறுதிப்படுத்துகின்றது.

## (4) மனிதவளம் தொடர்பான இடர் முகாமைத்துவம்

வியாபாரத்தைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு முக்கியத்துவம் வாய்ந்த மனித மூலத்தை அபிவிருத்தி செய்வதில் கம்பனி கவனத்தைச் செலுத்தி வருகின்றது. கம்பனியின் மனிதவள அபிவிருத்தித் தொழிற்பாட்டின் மூலம் மதிப்பிடப்படுகின்ற தேவைகளின் பேரில் ஊழியர்கள் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் அடிப்படையிலும் பொருத்தமான முறையில் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர்.

## (5) சுகாதார மற்றும் பாதுகாப்பு இடர் முகாமைத்துவம்

வியாபாரத்தைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்கு மனித மூலதனத்தின் பாதுகாப்பு மிக இன்றியமையாதது என கம்பனி நம்பிக்கை கொண்டிருப்பதனால் தொழில் புரிகின்ற இடத்தில் ஊழியர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான இடர்பாடு மிக முக்கிய கவனத்தைப் பெறுகின்றது. ஒவ்வொரு அமைவிடத்திலும் பயிற்றுவிக்கப்பட்ட ஆட்களை வேலைக்கு அமர்த்துவதுடன், காயம் ஏற்படுவதற்குச் சாத்தியமாகவுள்ள எல்லா இயந்திராதி மற்றும் உபகரணங்கள் தொடர்பாகவும் பாதுகாப்பு முன் எச்சரிச்சைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## (6) தகவல் இடர் முகாமைத்துவம்

கணனி முறையின் உதவியுடன் ஒவ்வொரு பங்குதாரர்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சரியான மற்றும் தொடர்பான தகவலை கம்பனி சமர்ப்பிக்கக்கூடியதாக உள்ளது. இந்த முறை காலம் தோறும் மீள்நோக்கப்படுகின்றதுடன், சொப்ட்வெயார் வழங்குநருடன் ஒரு பராமரிப்பு ஒப்பந்தம் அமுலில் உள்ளது.

# கூட்டுறவு ஆளுமை

கூட்டுறவு ஆளுமை என்பது கம்பனிகள் எந்த முறைகள் மூலம் பணிப்புரை மற்றும் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதை விளக்குகின்றது. கம்பனியின் செயற்பாடுகள் என்றும் உயர் ஒழுக்க தரங்கள் மற்றும் சகல பங்குதாரர்களினதும் மிகச் சிறந்த ஆர்வத்திற்கமையவும் நடத்தப்படுகின்றன என்பதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது. இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு ஆளுமை தொடர்பாக சிறந்த நடத்தை கோட்பாடு கொள்கைகள் மற்றும் விதிகளினாலும் வழிநடத்தப்படுகின்றது.

## பணிப்பாளர் சபை

### உள்ளடக்கம்

பணிப்பாளர் சபை, தலைவர் மற்றும் நான்கு நிறைவேற்றுப் பணிப்பாளர்களையும் உள்ளடக்குகின்றது. பொது நம்பிக்கையாளர் மூன்று பணிப்பாளர்களையும் பங்குதாரர்கள் இரண்டு பணிப்பாளர்களையும் நியமிக்கின்றனர். சபையின் உத்தரவைப் பாதுகாத்து நடத்திச் செல்வதற்கு சபைத் தொழிற்பாடுகளைத் திறமையாக வெளிப்படுத்துவதனை இலகுபடுத்துவதற்கும் முகாமைத்துவப் பணிப்பாளராக தலைவர் விளங்குகின்றார்.

### கூட்டங்கள் மற்றும் ஒழுங்காக நடாத்தப்படுத்தலும் வருகை தரலும்

சபை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையும் தேவையான போது விஷேட கூட்டங்களையும் நடத்துகின்றது. பணிப்பாளர்கள் தொடரான திறமைகள் மற்றும் அனுபவத்தையும் கொண்டுள்ளனர். அத்துடன் ஒவ்வொருவரும் சபையில் பேச்சுவார்த்தைகளுக்குக் கணிசமான அறிவையும் சுயேட்சையான தீர்ப்பையும் கொண்டுவருகின்றனர்.

2013ஆம் ஆண்டின் சபை 18 கூட்டங்களைக் கூட்டியுள்ளது.

கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணை பணிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் வருகை விபரங்களைத் தெளிவாகக் காட்டுகின்றது.

| பணிப்பாளரின் பெயர் | வருகைதந்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. பந்துல பத்மகுமார | 18 |
| திரு. எதிரிசிங்க விதானகே பிரசாத் ரசங்க ஹரிஸ்சந்திர | 18 |
| திரு. உபுல் ரன்ஜன் சமரசிங்க திஸாநாயக்க | 18 |
| திரு. சீலரத்ன செனரத் | 18 |

### சபை குழுக்கள் மற்றும் அவர்களது உள்ளடக்கம்

சபை, மூலதனச் செலவு, இறக்குமதிகள் மற்றும் உள்ளூர் கொள்வனவுக்காக கொள்வனவுக் குழுவையும் கணக்காய்வுக்குழுவையும் நிறுவியுள்ளதுடன், ஒவ்வொன்றிலும் பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களையும் கொண்டுள்ளது.

### நிதி அறிக்கை மற்றும் புலப்படுதல்

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட கணக்கியற் தரங்கள், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியற் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் வருடாந்த அறிக்கையில் உட்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

## நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு தொடர்பான கூற்றுக்கள் வருடாந்த அறிக்கையின் 22ஆம் பக்கத்தில் கொடுக்கப்படுகின்றன.

## அரச நியதி கொடுப்பனவு தொடர்பான இணக்கப்பாடு

எல்லா அறியப்பட்டுள்ள அரச நியதி கொடுப்பனவுகள் ஒழுங்கான முறையில் செலுத்தப்பட்டுள்ளதுடன், ஊழியர்கள் சார்பாக செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ளன.

## உள்ளகக் கட்டுப்பாடு

உள்ளகக் கட்டுப்பாடுகளின் முறைகள், தவறுகள், தவிர்க்கப்பட வேண்டியவை மற்றும் குறைகள் கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதிலிருந்து எழுகின்ற இடர்பாடுகளை உள்ளடக்குதல், கடமைகளைத் தனியாகப் பிரித்தல், அதிகார மட்டங்கள் மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு போன்ற ஒழுங்கான நடைமுறைகளூடாகப் புத்தக செட்டை முறையாகப் பராமரித்தல் போன்றவற்றை வடிவமைத்துள்ளன.

கம்பனி தற்பொழுது போதிய மற்றும் திறமையான உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு சபைக்கு உண்டு. தினசரி நிதி மற்றும் நிதி சாராத செயற்பாடுகள் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பகுதியினால் முறையாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

## பங்குதாரர்களுடனான உறவுமுறை

கம்பனி மீது பங்குதாரர்களினால் மேற் கொள்ளப்படுகின்ற முக்கியமான பங்களிப்பை பணிப்பாளர் சபை தொடர்ந்து அங்கீகரித்துள்ளது. பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் சுறுசுறுப்பான பங்களிப்பையும் அவர்களது அபிப்பிராயங்களையும் ANCL எப்பொழுதும் வரவேற்கின்றது.

## கூட்டுறவு சமூக பொறுப்பு

சமுதாயம் மற்றும் சமூகம் தொடர்பாக கம்பனி பெருமளவில் அதன் பொறுப்புக்களை நன்கு விளங்கியுள்ளது.

## ஊழியர் விவகாரங்களும் தொலைத்தொடர்பும்

ஊழியர்கள் முகாமைத்துவத்திற்குக் கட்டுப்பாடற்ற முறையில் பிரவேசித்த தமது எண்ணங்களுக்கு குரல் கொடுப்பதற்கும் உடனுக்குடன் தமது துயரங்களைத் தீர்த்துக்கொள்வதற்கும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளனர்.

## சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடல் தொடர்பாகப் பாதகமான தீங்குகளுக்குக் காரணமான எந்தவொரு செயற்பாட்டிலும் கம்பனி ஈடுபடப்போவதில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு நாம் எல்லா சாத்தியமான மதிப்பீடுகளையும் எடுத்துள்ளோம். அத்துடன் அது பொருத்தமான சுற்றாடல் ஒழுங்குவிதிகளைப் பேணி செயற்படும்.

## அவதானத்துடன் செல்லுதல்

எதிர்கால தீர்க்கதரிசனத்துடன் போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என்பதையும் இதன் காரணமாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற போது கம்பனி ‘அவதானத்தைச் செலுத்தல்’ என்ற கருத்தினைக் கம்பனி பின்பற்றியுள்ளது என்பதையும் பணிப்பாளர் சபை திருப்திப்படுத்துதல் வேண்டும்

# கூட்டுறவு ஆளுமை

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு காலாண்டு அடிப்படையில் கூடுகின்றது. அத்துடன் பின்வருவோரை உள்ளடக்குகின்றது.

| | | |
|---|---|---|
| திரு. பந்துல பத்மகுமார | - | தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் (குழுவின் தலைவர்) |
| திரு. ரசங்க ஹரிஸ்சந்திர | - | பணிப்பாளர் சட்டம் மற்றும் நிருவாகம் |
| திரு. அபய அமரதாச | - | பொது முகாமையாளர் |
| திருமதி. குமுது குணவர்தன | - | கம்பனி செயலாளர் |
| திரு. விராஜித் போயிஸ் | - | பிரதிப் பொது முகாமையாளர் - நிதி |
| திரு. சிசிரநாத் அதிகாரி | - | பிரதம உள்ளக கணக்காய்வாளர் (குழு கூட்டம் கூட்டுபவர்) |

கம்பனி வெளிவாரி கணக்காய்வாளராக கடமை புரிகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் பொது சனத்தொடர்பு ஊடக மற்றும் தகவல் அமைச்சின் பிரதிநிதிகளும் அவற்றின் அங்கத்தவர்களின் அழைப்பின் பேரில் அவதானிப்பாளர்களாக குழுக்கூட்டங்களில் இணைந்து கொள்கின்றனர்.

2013 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த நிதி ஆண்டுக்காக மொத்த எண்ணிக்கையான நான்கு (04) கணக்காய்வுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்தல், கணக்கியற் தரங்கள் மற்றும் அறிக்கைகளுடன் இணக்கப்பாட்டைப் பரிசீலனை செய்தல் இணக்கப்பாடற்ற தவறுகளை தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல் மற்றும் சரிப்படுத்தும் செயற்பாடுகளின் சீராக்கலுக்காக சம்பந்தப்பட்ட முகாமையாளர்களுடன் இணைந்து செயற்படுதல் போன்ற பல்வேறு தொழிற்பாடுகளின் திறமையை உறுதிப்படுத்துவதற்கு முன்னர் திட்டமிட்ட அடிப்படையில் நிதிசார் கணக்காய்வுகள் மற்றும் முறைசார் கணக்காய்வுகளை பிரதம உள்ளக கணக்காய்வாளர் மேற்கொள்கின்றார்.

மேலதிகமாக, கணக்காய்வுகள் மற்றும் நோக்கத்தையும் அத்துடன் கணக்காய்வாளர்களின் சுயாதீனத்தையும் மீளாய்வு செய்வதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு, வெளிவாரி கணக்காய்வாளர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்துடன் கூடுகின்றது.

# பணிப்பாளர்களின் அறிக்கை

2013 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு கணக்குகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்று மற்றும் ஐந்தொகை சகிதம் அத்திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

**1. கம்பனி செயற்பாடுகள்**

கம்பனியின் பிரதான செயற்பாடுகள் புதினப்பத்திரிகை மற்றும் பருவ வெளியீடுகளை அச்சிடல், பிரசுரித்தல் மற்றும் விநியோகித்தல் என்பனவாகும்.

மீளாய்வுக்குட்பட்ட நிதி ஆண்டில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் முக்கியமான மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

**2. நிதிக் கூற்றுக்கள்**

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இந்த வருடாந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**3. கணக்காய்வாளர்களின் அறிக்கை**

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர்கள் அறிக்கை வருடாந்த அறிக்கையின் 23 வரையிலான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

**4. முக்கியமான கணக்கியற் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான கணக்கியற் கொள்கைகளின் விபரங்கள் இந்த வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியற் கொள்கைகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

**5. இந்த ஆண்டின் மீள்நோக்கு**

நிதி ஆண்டில் கம்பனியின் செயற்பாடுகளின் மீள்நோக்கு மற்றும் அந்த செயற்பாடுகளின் பெறுபேறுகள் இந்த வருடாந்த அறிக்கையில் தலைவரின் மீள்நோக்கு மற்றும் நிதி மீள் நோக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**6. வருமானம் ஒதுக்கம்**

2013 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதியில் கம்பனி மொத்த வருமானம் ரூபா 3,593 மில்லியனைப் பெற்றுள்ளது.

**7. இலாபம் மற்றும் ஒதுக்கங்கள் (ரூபா. மில்லியன்)**

| | 2013 | 2012 |
|---|---|---|
| வரி மற்றும் நியாயமான பெறுமதிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்) | 73 | 57 |
| வரி விதிப்பு | (12) | (6) |
| நியாயமான பெறுமதி சீராக்கல் | (2) | (59) |
| வரிக்குப் பின்னர் இலாபம்/(நட்டம்) | (59) | (8) |
| பங்கிலாபங்கள் இலாபம்/(நட்டம்) | - | - |
| முன்கொண்டு செல்லப்பட்ட பங்கிலாபங்கள் | | |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் | (59) | (8) |

**8. வருமான ஒதுக்கங்கள்**

2013 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு கம்பனியின் வருமான ஒதுக்கங்கள் ரூபா 346.9 மில்லியன் ஆகும்.

**9. சொத்து, பொறி மற்றும் உபகரணம்**

2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் கம்பனி சொத்து, பொறி மற்றும் உபகரணம் மீதான மூலதனச் செலவினம் மற்றும் மூலதன நடைமுறை வேலை ரூபா 40.7 மில்லியன் ஆகும். இந்த ஆண்டுக்கான சொத்து, பொறி மற்றும் உபகரணத்தின் அசைவு நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 6இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**10. நன்கொடைகள்**

இக்காலப்பகுதியில் கம்பனி தரும ஸ்தாபனங்களுக்கு ரூபா 2933 மில்லியனை வழங்கியுள்ளது.

**11. ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள்**

ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் ரூபா 109.57 ஆகும்.

**12. பங்கு தகவல்**

வருமானங்கள், பங்கிலாபங்கள் மற்றும் ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் தொடர்பான தகவல் நிதிசார் கண்ணோட்டம் மற்றும் பத்து ஆண்டு சுருக்கக் கூற்றுக்களிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பங்குடைமை விநியோகம் பங்கு தகவல் அறிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது

**13. கணிசமான பங்குடைமை**

இலங்கை அரசின் சார்பாக பொது நம்பிக்கையாளர் 87.5% பங்குகளை வைத்திருக்கின்றது.

**14. பணிப்பாளர்கள்**

2013 டிசம்பா 31ஆம் திகதியன்று கம்பனியின் பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது பங்குடைமை பின்வருமாறு:

| | **பங்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| திரு. பந்துல பத்மகுமார | இல்லை |
| திரு. எதிரிசிங்க விதானகே பிரசாத் ரஸங்க ஹரிஸ்சந்திர | 1 |
| திரு. உபுல் ரன்ஜன சமரசிங்க திஸாநாயக்க | இல்லை |
| திரு. சீலரத்ன செனரத் | 1 |

**15. இக்காலப்பகுதியில் இராஜினாமா/ புதிய நியமனங்கள்**

இக்காலப்பகுதியில் இராஜிமானா அல்லது புதிய நியமனங்கள் இடம்பெறவில்லை.

**16. பணிப்பாளர்களுக்கு கடன்**

கம்பனியின் பணிப்பாளர்களுக்குக் கடன்கள் வழங்கப்படவில்லை.

**17. ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு**

2013 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியுடன் எந்தவொரு ஒப்பந்தம் அல்லது உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தத்திலும் பணிப்பாளர்கள் நேரடியான அல்லது மறைமுகமாக பங்கினைக் கொண்டிருக்கவில்லை.

**18. பணிப்பாளர்களின் சம்பளம்**

2013ஆம் ஆண்டுக்காக கம்பனியின் பணிப்பாளர்களின் சம்பளம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 19இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**19. பிந்திய ஐந்தொகை நிகழ்வுகள்**

2013 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு கணக்குகளின் சீராக்கங்கள் செய்வதற்குத் தேவையான எந்தவொரு நிகழ்வும் இடம் பெறவில்லை.

**20. அரச நியதி கொடுப்பனவுகள்**

பணிப்பாளர்கள் அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரை, அரசாங்க மற்றும் ஊழியர்களுக்கு சகல அரச நியதிகள் தொடர்பான கொடுப்பனவுகளும் ஒழுங்காகக் கொடுக்கப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றனர்.

**21. அவதானத்துடன் செல்லுதல்**

எதிர்கால தீர்க்கதரிசனத்துடன் போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என்பதையும் இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கின்ற போது கம்பனி ''அவதானத்தைச் செலுத்துதல்'' என்ற கருத்தினைக் கம்பனி பின்பற்றியுள்ளது என்பதையும் பணிப்பாளர் சபை திருப்திப்படுத்துகின்றது.

**22. சுற்றாடல் பாதுகாப்பு**

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப கம்பனி சுற்றாடல் தொடர்பாகப் பாதகமான விளைவுகளுக்குக் காரணமான எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை என்பதுடன், குறிப்பிட்ட சுற்றாடல் ஒழுங்கு விதிகளுக்குரிய இணக்கப்பாட்டைக் கொண்டுள்ளது எனவும் திருப்தியடைகின்றனர்.

**23. கணக்காய்வாளர்கள்**

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் சரத்து 154(3) க்கமைய இவ்வாண்டுக்கான கணக்குகள் கணக்காய்வாளர்கள் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

*பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்*

**குமுது எச். குணவர்தன இம்புலமுரே**
**கம்பனிச் செயலாளர்**

# நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்பு கீழ்க்கண்டவாறு விபரிக்கப்படுகின்றது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அவர்களது பொறுப்புக்களை கணக்காய்வாளர்களின் அறிக்கை விளக்குகின்றது.

நிதி ஆண்டின் முடிவுத் திகதியன்று கம்பனியின் உண்மையான நியாயமான விவகாரங்களின் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு நிதியாண்டினதும் நிதிக் கூற்றுக்களும் இந்த நிதியாண்டின் வருமானக் கூற்றுக்களும் தயாரிக்கப்பட வேண்டுமென 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் கேட்டுக் கொள்கின்றது. இந்தக் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற பொழுது பின்வருவனவற்றை உறுதிப்படுத்துமாறு பணிப்பாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

1. உள்ளடங்கல் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மற்றும் பிரயோகிக்கப்பட்டுள்ள பொருத்தமான கணக்கியற் கொள்கைகள் ஏதேனும் இணைக்கப்பட்ட பொருட்கள் வெளியேற்றம் விபரிக்கப்படுகின்றன.
2. பொருத்தமான சகல கணக்கியற் தரங்களும் பின்பற்றப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துதல்.
3. சீராக்கங்கள் மற்றும் மதிப்பீடுகள் நியாயமானவையும் தீர்க்க தரிசனமுடையதென்பதையும் உறுதிப்படுத்துதல்.
4. கம்பனிச் சட்டத்திற்கமைவாக நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் நிதி நிலைமை நியாயமான சரியான தன்மையையும் போதுமான கணக்கியற் தரங்களைக் கொண்டுள்ளதையும் உறுதி செய்வதற்குப் பணிப்பாளர்கள் பொறுப்பாளிகளாவர். கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலஞ்சம் மற்றும் தவறுகளை விட்டொழிப்பதற்கும் கண்காணிப்பதனையும் கருத்திற் கொண்டு உள்ளக கட்டுப்பாடுகளைப் பாதுகாப்பதற்கும் உண்மையான உறுதிப்பாடுகளினூடாக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை நிறுவுவதற்கும் கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அவர்கள் பொறுப்புடையோராவர்.
5. நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் கணக்காய்வு அறிக்கையை வழங்குவதற்கும் அவர்களது கணக்காய்வு அறிவை வழங்கும் நோக்கில் பொருத்தமான முறையில் எந்தவொரு நடவடிக்கை எடுப்பதற்கும் பொருத்தமானதாகக் கருதுமிடத்து எந்தவொரு கண்காணிப்பைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

இந்தக் கூற்றிற்கு அமைவாகத் தமது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளனர் என்பதை பணிப்பாளர்கள் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

சகல நிதி அறிக்கைகள் சம்பந்தப்பட்ட தரவு மற்றும் பங்குதாரர்கள் மற்றும் பணிப்பாளர்களின் கூட்ட அறிக்கைகள் மற்றும் வருடாந்த அறிக்கையின் பக்கத்தில் தமது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுடன் பணிப்பாளர் சபையினால் கிடைக்கச் செய்துள்ள நிதிக் கூற்றுக்கள் கம்பனியின் கணக்காய்வாளர்கள் பரிசீலனை செய்துள்ளனர் என்பதைக் கணக்காய்வாளர் நாயகம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

சபையின் கட்டளைப் பிரகாரம்

**தி. அஸோசியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்**
**குமுது எச். குணவர்தன இம்புலமுரே**
கம்பனிச் செயலாளர்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**ரீஎம்-1/எவ்/ஏன்சீஎல்/1/13/26** **2014 நவம்பர் 28**

**தலைவர்,**
**வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனி.**

**வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 28 ஆம் இலக்க வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனி (விசேட ஏற்பாடு) சட்டத்தின் 16 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கையொன்று கம்பனியின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுகள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3)ஆம் மற்றும் (4)ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது காணக்காய்வு, அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனியின் (ஏஎன்சீஎல்) 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மறறும் நடுத்தர அளவிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 திரண்ட நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 திரண்ட நிதிக்கூற்றுக்கள்**

முழுமையான உடமையாக்கப்பட்ட துணைக் கம்பனிகளாகவிருந்த வரையறுத்த லேக்ஹவுஸ் ஆதன அபிவிருத்தி (தனியார்), வரையறுத்த தகவல் ஊடகம் (தனியார்) மற்றும் வரையறுத்த இலங்கை வர்த்தக என்பவற்றின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் திரண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக எடுக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை**

திரண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது, வரையறுத்த சிலோன் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் கம்பனியின் முகாமைத்துவம் எஸ்எம்ஈ களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 3.8ஆம் பிரிவுகளின் பிரகாரம் தொடந்தியங்கும் தன்மை அடிப்படையில் வியாபாரத்தை தொடருவதற்கான கம்பனியினுடைய சாத்தியத்தன்மையை மதிப்பிட்டிருக்கவில்லை. மேலும், கம்பனியின் தேறிய சொத்துக்கள் கம்பனியின் உள்ள தன்மைக்கு ஆபத்தொன்றாக இருந்த ஏறத்தாழ 32 சதவீதத்தால் கடந்த ஐந்து ஆண்டுகளின் போது வீழ்ச்சியடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. வரையறுத்த இன்போ மீடியா (தனியார்) இன் நிதிக்கூற்றுக்கள் கம்பனி தொடர்ந்தியங்கும் தன்மையில் உள்ளதென அனுமான எடுகோள் அடிப்படையில் திரட்டப்பட்டிருந்த போதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளின் போது ஏற்பட்ட பாரிய நட்டங்கள் காரணமாக முன்னைய ஆண்டின் போது கம்பனியின் வர்த்தக செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், இதன் விளைவாக தேறிய சொத்துக்கள் தீவிரமாக சீரடைந்தும் இருந்தது என அவதானிக்கப்பட்டது.

**2.2.3 சிறிய மற்றும் நடுத்தர அளவிற்கான (எஸ்எம்ஈ கள்) இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரிவு 23.10 - கம்பனியின் வருடாந்த வெளியீடுகளிலிருந்து பெறவேண்டிய வருமானத்தை கம்பனி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரிவு 23.10 - குத்தகை அடிப்படையில் மற்றும் கம்பனியால் பயன்படுத்தப்பட்ட சுவீகரிக்கப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் பொதி மூலதனமாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரிவு 20.09 - கம்பனியின் விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள காணியின் பெறுமதி பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆரம்பத்திலிருந்த இந்தச் சொத்துக்கள் செயற்பாட்டு குத்தகையாக காட்டப்பட்டிருந்ததென 2014 யூலை 29இல் கம்பனியின் தலைவர் எனக்கு தெரிவித்திருந்தார். இந்த கொடுப்பனவுகள் தொடர்பான கொடுப்பனவுகள் மாத்திரம் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு ரூபா 8,966ஆன மாதாந்த கொடுப்பனவாக உள்ளது.

(ஈ) பிரிவு 8.5 நட்ட மற்றும் ஐயக் கடன்களின் ஏற்பாட்டிற்கான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரிவு 33.9 - மீளாய்வாண்டின் போது கம்பனியானது வரையறுத்த லேக்ஹவுஸ் ஆதன அபிவிருத்தி (தனியார்) ஆல் முன்னரே உடமையாக்கப்பட்டிருந்த ஆதனங்களை ஈடுவைப்பதன் மூலம் வர்த்தக வங்கியிடமிருந்து ரூபா 175 மில்லியன் தொகையான கடன் பெற்றிருந்தது. எவ்வாறாயினும், இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரண்ட நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகளில் குறிப்பிடப்பட்டவாறு வருமான பதிவு மீதான கணக்கீட்டுக் கொள்கைக்கு அமைய புதினப்பத்திரிகைகளின் சுழற்சிகளில் திரும்ப ஏற்பதற்கு ஒதுக்கப்பட்ட திருப்பிய பத்திரிகைகளின் பெறுமதிக்காக மீளாய்வாண்டு தொடக்கம் மற்றும் இறுதியில் சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 3,652,341 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கம்பனியின் பராமரிப்பு திணைக்களத்தால் ஏனைய பிரிவுகளிற்கு உற்பத்தி செய்து கையளிக்கப்பட்டிருந்த 16 மூலதன சொத்துக்களிற்கு சார்ந்திருக்கின்ற செலவினங்கள் மூலதனமாக்குவதற்குப் பதிலாக செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. மேலும், அந்தச் சொத்துக்களின் கிரய விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) கம்பனியின் வருடாந்த வெளியீட்டு திணைக்களத்தால் மீளாய்வாண்டின் பொது புத்தகங்களின் அச்சிடலிற்காக ரூபா 2,453,125 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு திணைக்களத்தால் அச்சிடப்பட்டு விற்கப்படாத புத்தகங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோருக்கு சமமான தொகை நட்ட மற்றும் ஐயக் கடன்களாக வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், கம்பனியானது கணக்கீட்டு கொள்கைக்கு அமைய நட்ட மற்றும் ஐயக்கடன்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நட்ட மற்றும் ஐயக்கடன்களிற்காக ஏற்பாடு ரூபா 14,452,315 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

### 2.2.5 விளைக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இணக்கங்கள் செய்யப்பட்டிருந்த 13 இருப்பு விடயங்கள் தொடர்பான பேரேட்டு மீதிகளின் பெறுமதிக்கும் பௌதீக மெய்மையாய்வு இருப்புக்களின் பெறுமதிக்கும் இடையில் ரூபா 4,050,364 கூட்டு மொத்தத் தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும், இணக்கங்கள் செய்யப்பட்டிருக்காத 08 இருப்பு விடயங்கள் தொடர்பான பேரேட்டு மீதிகளின் பெறுமதிக்கும் பௌதீக மெய்மையாய்வு இருப்புக்களின் பெறுமதிக்கும் இடையில் ரூபா 3,967,520 கூட்டு மொத்தத் தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளிற்கு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைகளிற்கும் இடையில் வரவு மீதியில் ரூபா 680,270 ஆன வித்தியாசம் மற்றும் செலவு மீதியில் ரூபா 191,762 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு கம்பனி பதிவேட்டின் படி ஊழியர்களின் நிலுவையாகவிருந்த கடன் மீதிக்கும் ஊழியர் சேமலாப நிதியத்தால் கணக்காய்விற்கு

சமர்ப்பிக்கப்பட்ட நேரொத்த தொகைகளிற்கும் இடையில் ரூபா 588,715 கூட்டு மொத்தத் தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

**2.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 9,490,377 பெறுமதியான 185 திரும்பிய காசோலைகளிற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், இதில், ரூபா 4,693,656 பெறுமதியான 116 திரும்பிய காசோலைகள் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

(ஆ) ரூபா 645,835,280 பெறுமதியான வியாபார கடன்பட்டோருக்கு உறுதிப்படுத்தல் கோரப்படும் கடிதங்கள் அனுப்பப்பட்டதுடன் அதில் ஒட்டு மொத்தத்தில் ரூபா 19,773,464 உடன்பட்டிருந்தது. அதேநேரம் ரூபா 7,805,803 பெறுமதியான கடன்பட்டோர் உடன்பட்டிருக்காத அதேநேரம் ரூபா 618,256,013 இற்கான உறுதிப்படுத்தல்கள் 2014 ஏப்ரல் 30 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 35,290,509 பெறுமதிக்கு கோரிய உறுதிப்படுத்தல் கடிதங்கள் திரும்பியிருந்தது.

(இ) ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாகவிருக்கின்ற வியாபார கடன்பட்டோரின் கீழ் ரூபா 65,464,439 தொகை காட்டப்பட்டிருந்தது. அதில், ரூபா 20,726,548 தொகை அல்லது 31 சதவீதம் அறவிட வேண்டியதாக கருதி சட்டப் பிரிவுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கம்பனியின் ஆறு வங்கிக் கணக்குகளில் ஆறு மாதங்களிற்கு மேல் தெளிவுபடுத்தாமல் ரூபா 69,863 மற்றும் ரூபா 1,037,572 தொகையான முறையே இனங்காணப்படாத வரவு மற்றும் செலவுகள் இருந்தது..

**2.2.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

காணி மற்றும் கட்டிடங்களை தவிர ரூபா 320,028,287 தொகையான கம்பனிக்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் அந்த சொத்துக்களின் உள்ள தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் கம்பனியால் நிலையான சொத்துப் பதிவேடோ அல்லது மெய்மையாய்வு அறிக்கைகளோ பேணப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| அ) 1971இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(5)ஆம் பிரிவு | அரையாண்டு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கண்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 114(1) ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கம்பனியானது ஊழியர்களிடமிருந்து கழிக்காமல் ஊழியர்களிற்கு செய்யப்பட்ட மிகையூதிய கொடுப்பனவுகள் சார்பில் உழைக்கும் போதே செலுத்தும் வரியாக ரூபா 5,085,678 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |

| | |
|---|---|
| (i) 9.2(ஆ) | கம்பனியின் தாபன அமைப்பு மற்றும் பதவியணிக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 9.2(அ) | கம்பனியின் அனுமதிக்கப்பட்ட பதவியணி கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும், 2006 யூலை 31இல் உள்ளவாறு மற்றும் 2013 நவம்பர் 30இல் உள்ளவாறான உள்ளபடியான பதவியணி 2013 முதல் 2016 வரையான காலத்திற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (iii) பிரிவு 9.3.1 | ஒவ்வொரு பொது முயற்சிகளும் ஒவ்வொரு பதவிகளிற்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளிற்கான திட்டங்களை வைத்திருக்க வேண்டியதுடன், அத்திட்டங்கள் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்புடன் சபை மற்றும் உரிய அமைச்சால் அனுமதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களை வைத்திருக்கவில்லை. எனவே, கம்பனியானது உயர் முகாமைத்துவ பதவிகளிற்காக வேண்டப்பட்ட குறித்த கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை நிர்ணயிப்பதற்கு தவறியிருந்தது. |
| (ஈ) 2011 செப்தெம்பர் 15ஆந் திகதிய 58(2)ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.5 ஆம் பிரிவு | கம்பனியின் உத்தியோகத்தர்களிற்காக போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு பிரயாணப்படி, எரிபொருள் படி மற்றும் சாரதிப்படி மற்றும் வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல் என்பவற்றை நிர்ணயிப்பதற்கு கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் ஒத்திசைவு பெறப்பட்டிருக்கவில்லை. அதேநேரம், மீளாய்வாண்டின் போது மேற்குறிப்பிட்ட நோக்கங்களிற்காக கம்பனியால் ரூபா 70,407,461 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட திரண்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 59,928,374 ஆன சந்தைப் பெறுமதி சீராக்கல் கணக்கிற்கு எடுக்க முன்னர் ரூபா 57,429,835 ஆன நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 2,034,813 ஆன சந்தைப் பெறுமதி சீராக்கல் கணக்கிற்கு எடுக்க முன்னர் ரூபா 73,072,209 வரிக்கு முந்திய தேறிய இலாபத்தில் விளைந்திருந்தது. இது நிதி விளைவுகளில் ரூபா 15,642,375 ஆன முன்னேற்றத்தைக் குறிப்பிட்டுள்ளது. வர்த்தக அச்சிடல் திணைக்களத்தின் தேறிய வருமான அதிகரிப்பு மற்றும் புதினப்பத்திரிகைகள் மற்றும் நாளிதழ்களின் விற்பனைக் கிரய வீழ்ச்சி என்பன மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான பங்காற்றியிருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான கம்பனியின் மொத்த இலாப எல்லை மற்றும் இலாப இழிவெல்லை என்பன முறையே 1.74 சதவீதம் மற்றும் 6.22 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு மீளாய்வு தொடர்புபட்ட சில விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| **மொத்த இலாப எல்லை** | **2013** | **2012** | **முரண் (சாதகமானது/ பாதகமானது)** |
|---|---|---|---|
| | (%) | (%) | (%) |
| மொத்த இலாப எல்லை | 47.86 | 46.12 | 1.74 |
| இலாப இழிவெல்லை (விற்பனைக் கிரயத்தில் மொத்த இலாபம்) | 91.81 | 85.59 | 6.22 |
| விற்பனைப் புரள்வில் நிர்வாக கிரயம் | 36.74 | 34.84 | 1.90 |
| விற்பனைப் புரள்வில் விற்பனை மற்றும் விநியோக கிரயம் | 9.07 | 8.74 | 0.33 |
| விற்பனைப் புரள்வில் நிதிக் கிரயம் | 3.86 | 3.84 | 0.02 |
| திரவத்தன்மை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.59 | 1.41 | 0.18 |
| விரைவு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.13 | 1.00 | 0.13 |

### 3.3 கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட சட்ட வழக்குகள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கம்பனிக்கு எதிராக 70 சட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளதுடன், தீர்ப்புக்காக காத்திருக்கின்றன. சட்ட வழக்குகள் தொடர்பான மேற்படி விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிகழத்தக்க பொறுப்புக்களாக ரூபா 1,611,200 தொகை வழங்கப்பட்டிருந்தது.

### 3.4 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது கம்பனியின் தொழிற்படு மூலதன நிலைமை, திறனுடைய கடன் சேகரிப்பு நடைமுறை மற்றும் முறையான தொழிற்படு மூலதன முகாமைத்துவ கொள்கை இன்மை போன்ற காரணங்களால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவால், கம்பனியானது தொழிற்படு மூலதன விடயங்களை குறைக்கும் நோக்கத்துடன் ரூபா 175 மில்லியன் கடன் பெற்றிருந்தது. கடனானது ஏறத்தாழ 10 சதவீத வட்டி வீதத்துடன் ரூபா 3 மில்லியன் மாதாந்த தவணைப் பணங்களில் திரும்ப செலுத்தப்பட்டது. குறுகிய கால தொழிற்படு மூலதன தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நீண்ட கால கடன்களின் ஒதுக்கீடு முகாமைத்துவத்தால் மதிப்பாய்வு செய்திருக்கவில்லை.

மேலும், மீளாய்வாண்டின் போது மேலதிகபற்று வட்டியாக கம்பனியால் ரூபா 38.4 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியானது மீளாய்வாண்டின் போது 6 புதினப்பத்திரிகைகள், 22 சஞ்சிகைகள் மற்றும் 3 ஆண்டு வெளியீடுகள் என்பன வெளியிடப்பட்டிருந்த அதேநேரம் முன்னைய ஆண்டின் போது 6 புதினப்பத்திரிகைகள், 16 சஞ்சிகைகள் மற்றும் 02 ஆண்டு வெளியீடுகள் என்பன வெளியிடப்பட்டிருந்தது. புதினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் ஆண்டு வெளியீடுகள் என்பவற்றின் தேறிய பங்களிப்பு முன்னை ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது 15.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. கம்பனியானது மீளாய்வாண்டின் போது 6 சஞ்சிகைகளை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும், சகலதும் ரூபா 5.127 மில்லியன் எதிர்மறையான பங்களிப்புகளை உழைத்திருந்தது.

(ஆ) கம்பனியால் வெளியிடப்படுட்ட ஆறு புதினப் பத்திரிகைகள் கம்பனியின் நிதிசார் விளைவுக-ளிற்கு சாதகமான பங்களிப்பொன்றை செய்திருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கம்பனியின் புதினப் பத்திரிகைகளின் ஒட்டு மொத்த விளம்பர வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 15.8 மில்லியன் அல்லது 0.7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதேநேரம் கம்பனி மீளாய்வாண்டின் போது விலைத் திருத்தம் எதுவும் செய்திருக்கவில்லை.

(ii) கம்பனியின் ஒட்டுமொத்த புதினப்பத்திரிகை விற்பனை வருமானம் முன்னைய ஆண்டு

ரூபா 421.4 மிலியனில் இருந்து ரூபா 408.9 மில்லியன் வரை அல்லது 3 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும் ஒரு புதினப்பத்திரிகையின் விலை 2013 சனவரி 06 இலிருந்து 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. திரண்ட நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கமைய தொகுதியானது 28 வெளியீடுகள், 3 துணைக் கம்பனிகள், வர்த்தக அச்சகங்கள், ஆண்டு வெளியீடுகள் மற்றும் விசேடமாக டிஜிரல் அச்சகங்கள் என்பவற்றுடன் மேற்கொள்ளப்பட்டிருந்ததென கம்பனியின் தலைவர் எனக்கு தெரிவித்திருந்தார். கடந்த ஆண்டுகளாக ரூபா 124 மில்லியன் தொகையான வர்த்தக அச்சிடலில் வீழ்ச்சி காரணமாக பிரதானமாக தொகுதி விற்பனைச் சுழற்சியில் ரூபா 107 மில்லியன் வீழ்ச்சி உள்ளது. ஆகவே, தொகுதி விற்பனைச் சுழற்சியின் ஒரு பகுதியாக வர்த்தக அச்சிடலிலிருந்தது என்பதற்கு இது சான்றாகும்.

## 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கம்பனியின் உப கம்பனியாக பதிவு செய்திருந்த வரையறுத்த வியாபார லங்கா ஏஎம் (தனியார்) ரூபா 16 மில்லியன் வருமானமொன்றை உழைத்திருந்தது. எவ்வாறாயினும், மொத்த வருமானத்தில், ரூபா 9.9 மில்லியன் தொகை அல்லது 62 சதவீத கடன்பட்டோர் 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவையாக இருந்தன. 2014 ஏப்ரல் 30இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,296,960 தொகையான கடன்பட்டோர் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தன.

(ஆ) விளம்பரங்களைச் சேர்க்கும் நோக்கில் 2012ஆம் ஆண்டின்போது விளம்பர முகவர்களிற்காக முகவர் தரகு பதினைந்து சதவீதத்திற்கு மேல் ஊக்குவிப்பு திட்டமாகவும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முகவர்கள் வர்த்தக விளம்பரங்களுடன் தொடர்புபட்ட கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு எந்தவொரு கடமைப் பொறுப்புக்களையும் எடுத்திருக்கவில்லை. இந்த சூழ்நிலையின் கீழ், இந்த கடன்பட்டோர் மீதிகளின் அறவீட்டுத்தன்மை ஐயத்திற்கிடமாக உள்ளது. ஒரு வருடத்திற்கு மேலாக வர்த்தக விளம்பரங்களுடன் தொடர்புபட்ட நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோர் மீதி ரூபா 12,917,653 தொகையானதென மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) கம்பனியானது பல ஆண்டுகளாக செய்தி முகவர்களால் வைத்திருக்க வேண்டிய ஆகக்குறைந்த வைப்பு மீதியை திருத்தியிருக்கவில்லை. முகவர்களால் செய்யப்பட்ட வைப்புத் தொகை முகவர்களிடமிருந்து கம்பனிக்கு அறவிட வேண்டியதை விஞ்சியிருந்ததென அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், சில முகவர்கள் சட்ட நடவடிக்கைக்காக நிறுத்தி வைக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்டு அல்லது ஓய்வு பெற்றுள்ளனர்.

(ஈ) 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான கடன்பட்டோரில் விளம்பர முகவர்கள் ஊடாக பெறப்பட்ட விளம்பரங்களிற்காக 104 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 53,445,776 தொகை பெற வேண்டியதாக இருந்தது. இதன் பிரகாரம் கம்பனியானது ரூபா 9,431,607 ஐ தரகாக முகவர்களுக்கு கொடுப்பனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், கம்பனி அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளாக கம்பனிக்கு நேரடியாக அரசாங்கத்தினுடைய விளம்பரங்களை பெறுவதற்கு முறையான நடைமுறையை பின்பற்றுவதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த வெளியீட்டுத் திணைக்களம், வெளியீட்டுத் திணைக்கள கிரய நலன்களை பகுப்பாய்வு செய்யாமை, திறமையற்ற ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பங்கீட்டு முறைமையிலுள்ள நலிவுகள் போன்றவுடனும் அச்சிடல் நடவடிக்கையை நிறைவேற்றியமை காரணமாக தொடர்ச்சியாக நட்டம் அமைந்திருந்தது. அதாவது, திணைக்கள மீளாய்வாண்டிலும் ரூபா 4.8 மில்லியன் நட்டமொன்றினை அடைந்திருந்தது.

(ஊ) கடந்த சில ஆண்டுகளின் போது நிலவிய குறிப்பிடத்தக்க விற்பனைத் திரும்பல்களைக் குறைக்கும் நோக்கில், கம்பனியானது காலத்திற்கு காலம் ஒவ்வொரு புதினப் பத்திரிகைக்கும் திரும்பல் வீத முறைமையை அறிமுகப்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும் புதிய முறைமை அறிமுகப்படுத்திய பின்னர் ஒட்டு மொத்த விற்பனைத் திரும்பல்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 35,177,498 அல்லது 41 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(எ) வழமையான வேலை அச்சிடல் நடவடிக்கைகளிற்காக அவர்களுடைய பயன்பாட்டிற்கு முன்னர் வெட்டுவதற்காக கம்பனிக்கு வெளியே பேப்பர் சுருளை அனுப்புகின்றனர். இது சம்பந்தமாக பதிவுகள் கிடைக்கப்பெறாததால் வெளியில் வெட்டுவதற்காக அனுமதிக்கப்பட்ட சுருளின் நிறைக்கும் வெட்டிய பின்னர் பெறப்பட்ட சுருளின் நிறைக்கும் இடையான முரண்கள் சம்பந்தமாக கணக்காய்வின் போது நிரூபிக்க முடியவில்லை. 2013 திசெம்பர் 20 இலிருந்து 2014 பெப்ரவரி 25 வரையான காலத்தின் போது வெட்டுவதற்காக அனுப்பப்பட்ட நிறையிடப்பட்ட சுருள்களின் நிறைவெட்டிய பின்னர் பெறப்பட்ட சுருளின் நிறை முறையே 44,375 கி.கி. மற்றும் 38,567 கி.இ. ஆக இருந்தன. எனவே, வெட்டுவதற்காக அனுப்பிய பேப்பர்களின் 5,808 கி.கி அல்லது 13 சதவீதம் அசாதாரண நட்டமாக இருந்தது. எவ்வாறாயினும் முகாமைத்துவம் இந்த நட்டத்தை குறைப்பதற்கு முறையான உள்ளகக் கட்டுப்பாடொன்றை அமுலாக்கியிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ''தினகரன்'' மற்றும் ''வண்ணவானவில்'' பத்திரிகைகளை ஊக்குவிக்கும் நோக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் தனியான கிளையொன்று தாபிக்கப்பட்டது. புதிய கிளை தாபித்த பின்னர் அந்த இரண்டு பத்திரிகைகளின் விற்பனை வீழ்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது இந்த கிளையின் கோவைகள் எதுவும் பெறப்படாது கம்பனி சம்பளம் மற்றும் கூலிகளாக முறையே ரூபா 628,500 மற்றும் ரூபா 854,749 ஆன தொகை ஏற்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது தனியான டிஜிரல் அச்சிடல் பிரிவு ரூபா 1,680,000 இற்காக டிஜிரல் அச்சிடல் இயந்திரமொன்றை பெற்று தாபித்திருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது இந்த செயற்பாட்டிலிருந்தான தேறிய நட்டம் ரூபா 867,262 ஆக இருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்

விளம்பர முகவர்கள் அவர்களுடைய சேகரிக்கப்பட்ட விளம்பர பெறுமதிகளில் 1 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையிலான வீச்சிற்கு கழிவு கொடுப்பனவுகளிற்கு இலக்குகளை நிறைவேற்றிய விளம்பர முகவர்களிற்காக ஊக்குவிப்பு திட்டம் என்பன பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இல்லாமல் 2012ஆம் ஆண்டின் போது கம்பனியால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. உத்தேசிக்கப்பட்ட ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் 2012 மற்றும் 2013 ஆண்டுகளிற்காக முறையே 2,196,577 மற்றும் ரூபா 12,491,960 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கம்பனியானது மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளாக ரூபா 14,688,537 மேலதிக கொடுப்பனவுகள் ஏற்பட்டிருந்த போதிலும் மொத்த விளம்பர வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 15,755,000 ஆல் குறைவடைந்திருந்தது. ஆகவே, ஊக்குவிப்பு திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படுதல் ஐயத்திற்கிடமாக உள்ளது. சந்தை பங்கை பேணுவதற்கு நாங்கள் எதிர்காலத்திற்காக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை தொடர வேண்டும் என கம்பனியின் தலைவர் 2014 யூலை 29இல் எனக்கு தெரிவித்தார். ஆகவே, ஊக்குவிப்பு திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படுதல் எங்களுடைய வியாபார செயற்பாட்டிற்கு முக்கியமானதாக உள்ளது.

### 4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைதவிர்க்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட கட்டு தயாரித்தல் இயந்திரம் மற்றும் கமரா உபகரணம் மற்றும் உதிரிப்பாகங்கள், ஏனைய உபகரணங்கள் போன்ற நூற்றி எழுபத்தியொரு விடயங்கள் கைதவிர்க்கப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக வர்த்தக அச்சிடல் திணைக்களம் மற்றும் எழுத்தாளர் புகைப்பட பிரிவுகள் என்பவற்றின் வளவுகளில் வைக்கப்பட்டிருந்தது. அந்த விடயங்களின் பெறுமதி கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) வரையறுத்த இன்போ மீடியாவால் புதினப் பத்திரிகை அச்சிடலிற்காக பயன்படுத்தப்பட்ட கெல்டெல் பிரேக் சோட் இயந்திரம் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக பயனற்று இருந்தது. மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 5.5 மில்லியனாக இருந்தது.

(இ) வரையறுத்த லேக்ஹவுஸ் ஆதன அபிவிருத்தி (தனியார்) உடன் உடமையாக்கப்பட்ட ஹொகந்தரவில் அமைந்திருந்த 8 ஏக்கர் பரப்பளவுள்ள காணி 1985ஆம் ஆண்டிலிருந்து பயனற்று இருந்தது. இந்த காணியின் பெறுமதி கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31இல் எடுக்கப்பட்ட சபைத் தீர்மானத்தின் பிரகாரம், கம்பனியானது ஒரு மாதத்திற்கு ரூபா 143,000 தொகை செலுத்துவதற்கு உடன்படிக்கையொன்றில் கம்பனிக்காக வாகனத் தரிப்பிடமொன்று கட்டுவதற்கு புகையிரத திணைக்களத்திடமிருந்து காணியொன்றை பெற்றிருந்தது. எவ்வாறாயினும் வாடகையாக ரூபா 715,000 தொகையொன்றை செலுத்திய பின்னர் அத்தகைய வாகனத் தரிப்பிடத்தை கட்டாமல் புகையிரத திணைக்களத்திற்கு காணியை திரும்ப கையளித்திருந்தது.

(ஆ) ''தனமுத்து'' சஞ்சிகையின் பிரதம எழுத்தாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 7 புத்தகங்களில் 21,000 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 951,440 பெறுமதியான 13,592 பிரதிகள் மிகை மதிப்பீடு காரணமாக 2013 செப்தெம்பர் மாதத்திலிருந்து களஞ்சியத்தில் இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கம்பனியானது 49 மெ.தொன் அச்சிடல் செய்திகள் போக்குவரத்து நோக்கத்திற்காக ரூபா 4.8 மில்லியன் தொகை ஏற்படுத்தி செயற்பாட்டு குத்தகையில் பிரதம இயக்க சக்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தற்போது 6 மெ.தொன் அச்சிடல் செய்தி மாத்திரம் இந்த வாகனத்தை பயன்படுத்தி மாற்றியிருந்தது. ஆகவே, இந்த செலவினத்தால் எதிர்பார்த்த சேமிப்புக்கள் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியானது பல கம்பனிகளில் நீண்ட கால நிதிச் சொத்துக்களில் (பங்கு மூலதனம்) சில முதலீடுகளை செய்திருந்தது. 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு முதலீட்டு பத்திரங்களின் பெறுமதி ரூபா 135,362,000 ஆக இருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த முதலீடு மீதான பெறுகைகள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது 1.4 சதவீதம் முதல் 1.5 சதவீதம் வரையான வீச்சிலேயே இருந்தது.

(ii) 2008ல் லங்கா புவத்தில் ரூபா 1.2 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கம்பனியானது 2014 மே 31 வரை இந்த முதலீட்டில் இருந்து எவ்வித பெறுகைகளும் பெறப்பட்டிருக்கவில்லை.

எங்களுடைய முதலாவது அவதானிப்புகள் தொடர்பில் பல ஆண்டுகளிற்கு முன்பு செய்யப்பட்டிருந்த இந்த முதலீடுகளின் கிரயம் ரூபா 1 மில்லியனாக இருந்ததுடன், ஐந்தொகை திகதியில் உள்ளவாறு சந்தைப் பெறுமதி ரூபா 134.4 மில்லியனாக இருந்தது என்று 2014 யூலை 29இல் கம்பனியின் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார். நியம பெறுமதியில் செலுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள் குறைவாக உள்ள போதிலும் இந்த நிலைமை பெறுகைகளின் அதிகரிப்பை தெளிவாக காட்டுகிறது.

**4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியானது ரூபா 43,447,015 நிலுவையாகவிருந்த மீதிகளை அறவிடுவதற்கு அரசாங்க நிறுவனத்திற்கு எதிராக வழக்கொன்றை தொடர்ந்திருந்தது. எவ்வாறாயினும் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வழக்கை மீளப்பெற்றிருந்ததுடன், இதன் விளைவாக சொல்லப்பட்ட கடன்பட்டோருடன் தொடர்புபட்ட தேறிய மீளளிக்க வேண்டிய வற் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2012ஆம் ஆண்டின் போது முழுமையாக உடமையாக்கப்பட்ட வரையறுத்த இன்போ மீடியா (தனியார்) துணைக் கம்பனி அதன் செயற்பாடுகளை இடைநிறுத்தியதுடன் துணைக் கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 6,993,757 ஆக இருந்தது. இதன் விளைவால் கம்பனியால் முதலீடு செய்யப்பட்ட ரூபா 6,313,833 தொகையான முதல் மற்றும் வழங்கப்பட்ட மேலதிக நிதிகள் இழக்கப்பட்டுள்ளன.

**4.8 ஏனைய நிறுவனங்களிற்கு கம்பனியின் மனித மற்றும் பௌதீக வளங்களை விடுவித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9ஆம் பிரிவிற்கு முரணாக, ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு கம்பனியின் வாடகைக்கு பெறப்பட்ட நான்கு வாகனங்களை விடுவிக்கப்பட்டிருந்ததுடன், கம்பனியானது மீளாய்வாண்டின் போது அந்த வாகனங்களிற்கான வாடகை ரூபா 2,520,000 தொகை செலவழித்திருந்தது.

(ஆ) வருடாந்த வெளியீட்டுத் திணைக்களத்தின் உதவி முகாமையாளர் உள்ளடங்கலாக மூன்று உத்தியோகத்தர்கள் வேறொரு வெளி நிறுவனத்தின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன், கம்பனியானது மீளாய்வாண்டின் போது சம்பளங்கள், கூலிகள் மற்றும் வாகனப் படியாக ரூபா 2,256,098 தொகை செலவழித்திருந்தது.

**4.9 ஆளணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான அனுமதிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி 133 பதவியணியினர் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆட்சேர்ப்புகளிற்காக முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்கள் பிரகாரம், மீளாய்வாண்டின் போது சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் பணிப்பாளர்களின் சம்பளங்கள் மற்றும் கூலிகள் முறையே 5.2 சதவீதம் மற்றும் 108 சதவீதம் அதிகரித்திருந்தது.

## 5. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02ஆந் திகதிய பிஈடி/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5ஆம் பிரிவின் படி, கம்பனியால் 2013 - 2016 வரையான காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ஒன்றிணைந்த குறிக்கோள்களை அடைதல், குறிப்பாக கம்பனியின் பத்திரிகைகளின் சுழற்சியை அதிகரித்தல் என்பன சந்தையின் பத்திரிகைகளின் கேள்வியை பிரதானமாக்குவதற்கு ஒப்பீட்டை குறிப்பிடத்தக்களவு நிராகரித்திருந்தது.

**5.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

கூட்டிணைந்த திட்டத்துடன் இணைந்து மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சகல அரசாங்க அச்சிடல், வேலை விளம்பரங்கள், பிரதான பதவிகளின் பதவித் திட்டம் தயாரித்தல், வருமானம் உருவாக்குவதற்காக புதிய கிளைகள் திறத்தல், போக்குவரத்து கிரயத்தை குறைத்தல், புதிய பொருளிருப்பு மாதிரிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் திரும்பிய விற்பனைகளை அகற்றுதல் போன்ற மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**5.3 கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் கொள்வனவு திட்டமொன்றை வைத்திருக்காமல், மீளாய்வாண்டின் போது கம்பனியால் ரூபா 40 மில்லியன் தொகையான மூலதனச் செலவினம் ஏற்பட்டிருந்தது.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

செலவினங்கள் மீது வினைத்திறனான கட்டுப்பாட்டை செய்யும் நோக்கில் கம்பனியின் செலவின் வகுதிகளிற்கமைய விரிவான பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால், பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தவில்லை என்பதைக் குறிக்கின்றது.

**5.5 பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கையை முன்வைத்தல்**

2012ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2014 மே 31 வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.6 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையிலிருந்து வலியுறுத்தப்பட்டிருந்த பின்வரும் விடயங்களிற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) பணிப்பாளர் சபையின் அனுமதி இல்லாமல் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெறல்.
(ii) கேள்வி கோராமலும் உடன்படிக்கை கைச்சாத்திடாமலும் வாகனங்கள் பெறல்.
(iii) வரையறுத்த லேக்ஹவுஸ் ஆதன அபிவிருத்தி மற்றும் வரையறுத்த இன்போ மீடியா (தனியார்) என்பவற்றில் செய்யப்பட்ட முறையே ரூபா 7,500,000 மற்றும் ரூபா 2,500,000 ஆன முதலீடுகள் மீது எவ்வித நலன்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 09இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட பின்வரும் நெறிப்படுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(i) நிதிப் பணிப்பாளர் பதவிக்காக பொருத்தமான நபரை நியமிப்பதற்கு
(ii) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்த கொள்வனவு திட்டம் சமர்ப்பிப்பதற்கு
(iii) ரூபா 1.2 மில்லியன் தொகை லங்கா புவத்தில் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) கொள்வனவு
(ii) அதிகாரக் கையளிப்பு
(iii) வாகனப் பாவனை
(iv) கடன்பட்டோர்
(v) சொத்துக்கள் முகாமைத்துவம்
(vi) இருப்புக்கள்
(vii) நிலையான சொத்துக்கள்
(Viii) வர்த்தக அச்சிடல்
(ix) தொழிற்படு மூலதன முகாமைத்துவம்
(x) முதலீடுகள்

**ஒப்பம் :- டபிள்யு.பி.சீ. விக்ரமரத்ன**
**பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

## 2.2 கணக்குகள் தொடர்பான அபிப்ராயங்கள்

### 2.2.1 திரட்டிய நிதிசார் கூற்றுகள்

**ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.**

### 2.2.2 கம்பனியின் அவதானத்துடன் செல்லுதல்

SMEக்கான இலங்கை நிதிசார் அறிக்கைத் தரங்களின் பிரிவு இல. 3.9 இற்கமைய ஒரு ஸ்தூலப் பொருள் அவதானத்துடன் செல்லுதல் அடிப்படையில் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்காத விடத்து எந்த அடிப்படையில் அது நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்துள்ளது அத்துடன் ஏன் ஸ்தூலப்பொருள் அவதானத்துடன் செல்லலைப் பொருட்படுத்துவதில்லை என்பதற்கான காரணத்தை வெளியிடவுள்ளது. அவதானத்துடன் செல்லுதல் என்பதைத் தொடர்வதற்கு முகாமைத்துவம் அதன் ஆற்றலை மதிப்பீடு செய்துள்ள, இந்த விடயம் திரட்டிய நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் விடயம் 3.3 இன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

2009 மற்றும் 2010ஆம் ஆண்டு செலவினத்தில் VRS செலவு தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணமாகவே ரூபா 184 மில்லியன் தொகை 39% ஆல் அன்றி 1.1 2009 முதல் 31.12.2013 வரை 32% ஆல் தேறிய சொத்துக்களில் குறைவைக் கொண்டிருந்தது.

இன்போ மீடியா (பிறைவேட்) லிமிடெட்டினால் இழக்கப்பட்ட மொத்த நட்டம் அதன் மொத்த செயற்பாட்டின் பொழுது ரூபா 6.9 மில்லியனாக மாத்திரமே இருந்துள்ளது. அத்துடன் இதன் அமுத்தம் குழுவின் திரட்டப்பட்ட மிகுதிகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாகவே இருந்துள்ளது.

### 2.2.3 சிறிய மற்றும் நடுத்தர அளவுடைய வஸ்துக்களுக்கான இலங்கை கணக்கியற் தரங்கள் (SME's)

அ) முக்கியத்துவம் வாய்ந்த இடர்பாடுகள் மற்றும் பொருட்களின் உரிமைத்துவ வெகுமதிகள் கொள்வனவாளருக்கு ஸ்தூலப் பொருள் மாற்றப்படுகின்ற போது மாத்திரம் SME க்கான SLFRS இன் பிரிவு 23.10(அ) விற்பனைக்கான அங்கீகாரம் தேவைப்படுகின்றது. செயல் ரீதியாக நாம் வருடாந்த பிரசுரங்களை விற்பனை மற்றும் திருப்பிப்பெறல் அடிப்படையில் புத்தக விற்பனையாளர்களுக்கு அனுப்பியுள்ளோம் புத்தகக் கடைகள் மூலம் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற போது மாத்திரம் விற்பனை அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆ) இக் கொடுக்கல் வாங்கல் பதிவில் தவறு இருந்துள்ளது. இது 2014 கணக்குகளில் திருத்தப்படவுள்ளது.

இ) ஆரம்பத்திலிருந்து இந்த சொத்து ஒரு செயற்பாட்டு குத்தகையாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த குத்தகை தொடர்பான கொடுப்பனவுகள், கொழும்பு பிரதேச செயலகத்துக்கான வருடாந்த கொடுப்பனவு ரூபா 8,966/- மாத்திரமே இருந்துள்ளது. ஆகவே இந்த சொத்தை புத்தகங்களுக்கு நாம் கொண்டு வந்த போதிலும் நிதிசார் நிலையம் மீதான முக்கியத்துவம் மிகக் குறைவானதாகவே இருக்கும்.

ஈ) கடன் ஒதுக்கத்திற்காக பிரயோகிக்கப்பட்ட கணக்கியற்கொள்கை வருடாந்த அறிக்கையின் கணக்கியற்கொள்கை பிரிவின் பிரிவு 3, 11. 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

உ) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

### 2.2.4 கணக்கிற் குறைபாடுகள்

அ) புதினப்பத்திரிகை தொழில் மாத முடிவில் தயாரிக்கப்படுகின்ற செய்தி முகவர் நிலைய விலைப்பட்டியலில் இலாபங்கள் கழிக்கப்படுகின்றன, கணக்கியற்கொள்கைகளில் வெளியிடப்பட்டுள்ளவாறு இந்த மாதத்தில் அனுப்பி வைக்கப்பட்ட மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா இலாபங்களும் இந்த மாதாந்த விலைப்பட்டியில் பதிவு செய்யப்படுகின்றன. இலாப மீட்டுவதில் எப்பொழுதும் கால இடை வெளி இருப்பதனால் முன்னைய காலப்பகுதிகள் தொடர்பான இலாபங்கள் மாத்திரமே மாதாந்த விலைப்பட்டி

உள்ளடக்குகின்றது. குறிப்பிட்ட பத்திரிகை முகவர்களின் உண்மையான கணக்கு மிகுதியைக் குறிப்பிடுகின்ற வருமானம் மற்றும் கடன்பட்டோர் இந்த விலைப்பட்டிகளின் விபரங்கள் பதிவாகியுள்ளன. உங்களால் விமர்சிக்கப்பட்டு இலாபங்களை நாம் சீர்படுத்துவோமாயின், உண்மையான விலைப்பட்டி (கூற்று) குறிப்பிட்ட காலப்பகுதியில் அமுலில் உள்ள உண்மையான கொடுக்கல் வாங்கல்களுடன் இணங்குவதில்லை.

ஆ) இக்கம்பனி பல நிருவாகப் பகுதிகளைக் கொண்டிருப்பதால், அவற்றின் அமைப்புக்கள் மற்றும் வடிவமைப்பு வர்த்தக மற்றும் செயற்பாட்டு ரீதியான தேவைக்கு அமைவாக காலத்திற்குக் காலம் மாற்றம் அடைகின்றன. கம்பனி ஒரு தச்சுத் தொழில் பிரிவை நிருவகிப்பதனால் பெரும்பாலான திருத்தங்கள் உள்ளக ரீதியாகவே கையாளப்படுகின்றன. இந்த மாற்றங்கள் அடிக்கடி நிகழ்பவையாக இருப்பதனால் மூலதன மயப்படுத்துவதற்குப் பதிலாக மரம், ஒட்டுப்பலகை, மற்றும் நானாவித பொருட்களின் கொள்வனவுக்காகவே பிரதானமாக செலவிடப்படுகின்றன.

இ) எதிர்காலத்தில் ஒரு கையிருப்பு நடைமுறையை அமுல்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஈ) இணங்கியுள்ளது. இந்த மேலதிக ஒதுக்கம் 2014 ஆம் ஆண்டில் திருத்தப்படவுள்ளது.

**2.2.5 விபரிக்கப்படாத வேறுபாடுகள்**

அ) கணக்குகளைப் பூர்த்தி செய்கின்ற வேளையில் எரிபொருள் கையிருப்புக்கள் பொருட்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட முற்பண கொடுப்பனவுகள் கவனத்திற்கொள்ளப்படவில்லை பின்னர் இது கண்டுபிடிக்கப்பட்டு 2014 கணக்குகளில் சீர்படுத்தப்பட்டுள்ளன.

கூறப்பட்ட 08 கணக்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன அத்துடன் ரூபா 3,967,520 இற்கான கூட்டு மொத்த வேறுபாடு பிரதானமாக கொஸ் மெசுனம், உதிரிகள் காரணமாகவே இருக்கின்றது. பெற்றுக்கொள்ளல் வழங்கப்பட்ட அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4,943,026 பெறுமதியான பொருள், களஞ்சியப்படுத்தல் பகுதியினால் கையிருப்பு பொருளாக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. 2014 இல் இது சீர்படுத்தப்படவுள்ளதால், 2013 பொருள் ரீதியான கையிருப்புக்கு எடுக்கப்படவில்லை.

ஆ) ரூபா 680,720/- வேறுபாட்டுடன் கணனி முறையினால் தயாரிக்கப்பட்ட வயது பகுப்பாய்வுடன் 31.12.13 அன்று கணக்கு பதிவேட்டில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 878 மில்லியன் மொத்த கடன்பட்டோர் தொகை இணங்கவில்லை. எவ்வாறாயினும் இதன் பலனாக திருத்தப்பட்டுள்ளது.

இ) வேறுபாடுகளின் ஒழுங்கான விபரங்கள் கணக்காய்வுப் பகுதியினால் எமக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை, எவ்வாறாயினும் கம்பனியினால் நிருவகிக்கப்படுகின்ற ஊழியர் பதிவிலிருந்து பெறவேண்டியவை மற்றும் சேமலாப நிதி மூலமாக நிருவகிக்கப்படுகின்ற ஊழியர் பதிவுக்கான செலுத்த வேண்டிய தொகை ஒன்று மற்றொன்றுடன் இணங்குவதில்லை கம்பனிக்கு பெற வேண்டிய தொகை பிரதானமாக செலுத்த வேண்டியுள்ள கடன் நிலுவையைச் செய்துள்ளது. நிதியத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகை ஊழியர் கொடுப்பனவு மிகுதிகளில் குறிப்பிடப்படுகின்றது ஆகவே இந்த இரண்டு தொகைகளும் சமனாக இருக்க முடியாது.

**2.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

அ) அபகீர்த்தியுள்ள காசோலைகள் காரணமாக ஏஎன்சிஎல் கடன் நிலுவைகளை அறிவிடுவதற்கு அடிக்கடி பொருத்தமான நடைமுறைகளை நிருவகித்து வருகின்றது.

கீழ்க்காணும் அட்டவணை 31.12.2013 அன்றுள்ள அபகீர்த்தி ஏற்படுத்திய காசோலைகளைக் காட்டுகின்றது.

| ஆண்டு | காசோலைகளின் எண்ணிக்கை | தொகை ரூபா | தொகை ரூபா |
|---|---|---|---|
| 2009 | 08 | 215,701.00 | - |
| 2010 | 29 | 946,058.52 | |
| 2011 | 15 | 797,995.60 | 1959,755.12 |
| 2012 | 14 | 483,177.00 | - |
| 2013 | 49 | 2,346,868.78 | 2,830,045.78 |
| **மொத்தம்** | **115** | | **4,789,800.90** |

* 2013 ஆண்டுவரை 115 காசோலைகள் அபகீர்த்தியைக் கொண்டிருந்தன அதற்குப் புறம்பாக 52 காசோலைகள் மாத்திரமே ஒரு வருடத்தைவிட செலுத்தப்படாத நிலு-வையாக இருந்துள்ளன என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் இணங்கப்பட்ட பிரகாரம் ஏஎன்சிஎல் ரூபா 200,000/- இற்கு மேற்பட்ட கடன்பட்டோருக்கு உறுதிப்படுத்தல் கடிதங்களை அனுப்பியுள்ளது. எவ்வாறாயினும், சில கடன்பட்டோர் மாத்திரமே பதில் அளித்துள்ளனர் அத்துடன் இந்த நிலைமை எமது கட்டுப்பாட்டைத் தாண்டியுள்ளது.

இ) 2013 டிசம்பர் 31ஆம் திகதியன்று கடன்பட்டோர் மிகுதிகள் ரூபா 65,464,439/- தொகை 1 வருடத்தைத் தாண்டியிருந்த போதிலும், பெரும்பாலான செலுத்த வேண்டிய நிலுவைகள் 2014 ஆம் ஆண்டின் பொழுது அறவிடப்பட்டுள்ளது, கடன் கட்டுப்பாட்டு தொழிற்பாடுகளை மிருதுவாக்குவதற்காக, நீண்ட செலுத்த வேண்டிய கடன் நிலுவைகளுக்கு சட்ட உதவி நாடப்பட்டுள்ளது.

ஈ) வைப்பாளர்கள் ஏதேனும் தகவல் கொடுத்திராததன் காரணமாக நேரடி கடன் தொடர்பான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை, வேறு சில வழிகளில் தகவலைப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நேரடிகடன் பெரும்பாலும் இனம் காணப்பட்டுள்ளதுடன் சீர்ப்படுத்தப்பட்டுள்ளன.

**2.2.7 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை**

அ) கணக்காய்வாளர்களினாலே அடிக்கடி நோக்கப்படுகின்ற எல்லா நிலையான சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சொத்துக்கள் வருடந்தோறும் சரிபார்க்கப்படுகின்றன அத்துடன் சரிபார்க்கப்பட்டு நிரூபிக்கின்ற அறிக்கைகள் கிடைக்கின்றன.

**2.2.8 சட்டங்களுடன் இணக்கப்பாடின்மை**

அ) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

ஆ) ஏஎன்சிஎல் உரிய காலக்கெடுவில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டிய நிலுவையைச் செலுத்தித் தீர்க்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இணங்கியுள்ளது. எவ்வாறாயினும், கம்பனி பணிப்பாளர் சபை அதன் ஊழியர்களின் சார்பாக உபகாரக் கொடுப்பனவிலிருந்து எழுகின்ற செலுத்துவோர் வரி கம்பனியினால் பொறுப்பேற்கப்படவுள்ளது என தீர்மானம் எடுத்துள்ளது.

இ) i. அவதானிக்கப்பட்டுள்ளது.
ii. அவதானிக்கப்பட்டுள்ளது
iii. அவதானிக்கப்பட்டுள்ளது.

ஈ) பொது நிறுவன சுற்றுநிருப இல. 58 (2) இற்கமைய ஏஎன்சிஎல் ''எப்'' வகையின் கீழ் பட்டியலிடப்படுகின்றது, சுற்றுநிருபத்தின் பிரிவு 2.5 பிரிவின் முழுமையான சொல் பின்வருமாறு:

''இந்த சுற்று நிருபம் F உப. வகையில் அரசுக்குச் சொந்தமான நிறுவனத்துக்கு ஏற்புடையதாகாது அவை குறிப்பிட்ட உருவாக்கற் சட்டம் கம்பனிகள் சட்டம் சங்கத்தின் சரத்துக்கள் வரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்பு விதிகள் உட்பட ஏனையபொருத்தமான சட்ட விதிகளினால் ஆளுமை செலுத்தப்படுகின்றது. தலைவர், பணிப்பாளர் சபைக்கான அலவன்ஸ் கொடுப்பனவு அவ்வாறே சம்பளங்கள் ஏனைய அலவன்கள் இந்த உபவகையில் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பிரதான நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் சம்மதத்துடன் இதே மாதிரியான நிறுவனங்கள் கல்வி மற்றும் அதிகார மட்டத்திலுள்ள ஆட்களினால் செலுத்தப்படுகின்ற போட்டி சந்தை, விகிதத்திற்கு சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

மேலும் திறைசேரி திணைக்கள இணையதளங்களில் (www.treasury.gov.lk/ 2013.10.03-08-47.42 html) ஏஎன்சிஎல் உட்படுத்தப்படுவதில்லை.

## 3. நிதிசார் மீள் நோக்கு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

**அவதானிக்கப்பட்டுள்ளது.**

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீள் நோக்கு அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.3 கம்பனிக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

வேண்டப்பட்ட சட்ட நடவடிக்கைகள் தொடர்பான தகவல் உங்களுக்கு ஒழுங்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கணக்குகளுக்கான குறிப்பு 5இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கணக்காய்வு மூலம் அபிப்பிராயப்படுத்தப்பட்டுள்ள சடுதியான பொறுப்புக்களுக்கான ஒதுக்கம் ரூபா 10 மில்லியன் ஆகும் 1.6 மில்லியன் அல்ல. எவ்வாறாயினும், 2014 இல் ஒதுக்கம் ரூபா 20 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

### 3.4 தொழிற்படும் மூலதன முகாமைத்துவம்

தொழிற்படு மூலதன நிலைமையை மீள்நோக்கியதன் பின்னர் அடமானம் செய்யப்பட்ட கடன்கள் மீதான மேலதிக வட்டி நிலுவையைத் தவிர்ப்பதற்கு ஒரு தவணைக் கடன் வசதியைத் தெரிவு செய்துள்ளதுடன் திறமையான தொழிற்படு மூலதன நிலைமையை நிருவகித்து வருகின்றது. இந்த ஆண்டுக்கான மொத்த மேலதிகப்பற்று வட்டி ரூபா 28.2 மில்லியன் ஆகும்.

## 4. செயற்பாட்டு மீள்நோக்கு

### 4.1 செயற்பாடு

அ) குறைந்து வருகின்ற அச்சிடல் ஊடக வாசிப்பு முறையைப்பிடித்துக்கொள்வதற்குரியதோர் சந்தைப்படுத்தல் உபாயமாக 2010 - 2013 காலப்பகுதியினுள் 15 புதிய பிரசுரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு 2013 ஆம் ஆண்டின் பொழுது இந்த 15 பிரசுரங்களிலிருந்து வருமானம் ஈட்டிய மொத்த பங்களிப்பு ரூபா 7.7 மில்லியன் ஆகும்.

### புதிய பிரசுரங்களின் நிதிசார் செயற்பாடு - 2013

ரூபா' 000

| இல | பிரசுரம் | பதிவு செய்யப்பட்ட மொத்த வருமானம் | செலவிடப்பட்ட நேரடி செ.்.வினம் | கணக்குகளின் பிரகாரம் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 1 | மஞ்சு | 51,558 | 24,628 | 26,930 |
| 2. | ஆரோக்யா | 13,269 | 12,966 | 303 |
| 3. | விதுனென | 15,907 | 15,485 | 422 |
| 4. | சித்மின | 12,739 | 16,143 | (3,404) |
| 5. | அத்துருமித்துரு | 12,207 | 12,950 | (743) |
| 6. | வண்ணவானவில் | 2,809 | 5,796 | (2,987) |
| 7. | அலோகோ உடபாடி | 3,075 | 4,360 | (1,285) |
| 8. | முத்து அஹுரா 3 | 2,629 | 3,095 | (466) |
| 9. | முத்து அஹுரா 2 | 2,575 | 3,105 | (530) |
| 10. | முத்து அஹுரா 1 | 4,028 | 4,946 | (918) |
| 11. | முத்து அஹுரா 4 | 2,123 | 2,829 | (706) |
| 12. | நமஸ்கார | 3,677 | 6656 | (2,979) |
| 13. | மிஹிதுரு | 2,761 | 4,237 | (1,476) |
| 14. | தெனமுத்து | 1,433 | 4,666 | (3,233) |
| 15. | புது சுவந்த | 4,359 | 5,581 | (1,222) |
| | **மொத்த** | **135,149** | **127,443** | **7,706** |

ஆ) I. திரட்டிய நிதிசார் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்ற போது விஷேடமாக குரூப் 28 பிரசுரங்கள், 3 துணைப்பிரசுரங்கள், வர்த்தக அச்சிடல், வருடாந்த பிரசுரம் மற்றும் டிஜிட்டல் பிரின்டிங் போன்றவற்றை பிரசுரிக்கின்ற போது தேர்ந்தெடுக்கப்பட்ட 6 பிரசுரங்களை மாத்திரம் விமர்சிப்பதில் நாம் இணங்குவதில்லை கடந்த ஆண்டு வர்த்தக அச்சிடல் தொகை ரூபா 124 மில்லியன் வீழ்ச்சி காரணமாக குரூப்பில் மொத்த புரள்வு ரூபா 107 மில்லியன் வீழ்ச்சி காணப்படுகின்றது. ஆகவே, வர்த்தக அச்சிடல் குரூப் மொத்தப்புரள்விலிருந்து ஒரு பகுதி, அதிகரித்துள்ளது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

II. 2012 இல் ரூபா 674 இலிருந்து 2013 இல் 691 மில்லியன் வரை ரூபா 17 மில்லியனால் மொத்த விநியோக வருமானம் எல்லா 28 பிரசுங்களில் அதிகரிப்பைக் கொண்டிருப்பதனால் 6 புதினப்பத்திரிகைகள் விநியோக வருமானம் வீழ்ச்சி தொடர்பாக விமர்சித்தல் குறித்து நாம் முழுமையாக இணங்கப்போவதில்லை. நாம் மிக போட்டி சந்தையில் செயற்படுவதனால் எமக்கு போட்டியான பிரசுரதாரர்கள் தமது புதினப்பத்திரிகைகளுக்கு எமது வாடிக்கையாளர்களைத் தமது பக்கம் திசைதிருப்பியதன் காரணமாக எல்லை, எம்மீது மிக மோசமான அழுத்தத்தைக் கொண்டிருத்த போது இவ்வீழ்ச்சி உங்களால் விமர்சிக்கப்பட்டுள்ளது.

**4.2 முகாமைத்துவ திறமையின்மை**

அ) 2014 ஜூன் வரை கடந்த ஆண்டு கடன்பட்டோர் மிகுதியிலிருந்து நாம் ரூபா 4,048,940 (41%) ஐ நாம் அறவிட்டுள்ளோம்.

அறவிடுதல் மீது பிஸினஸ் லங்கா ஏஎன் (பிறைவேட்) லிமிடெட் விழிப்புணர்ச்சியைக் கொண்டுள்ளது. பெரும்பாலும் இந்த நிலைமைகளின் கீழ் கடன் காலப்பகுதியைத் தாண்டி கடன் வழங்கப்படுதல் தவிர்க்கமுடியாததாகும். எவ்வாறாயினும் கடன் அறவீடு மிகப் பொருத்தமான மற்றும் உயிரோட்டமான முறையிலும் தலைமைக் கம்பனிக்கு தீங்கு ஏற்படாத வகையிலும் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் அறவிடமுடியாக் கடன்களைக் குறைப்பதற்கும் கடன் அறவிடுதலை மேம்படுத்துவதற்கும் எல்லா சாத்தியமான மதிப்பீடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆ) பதினைந்து வீத விளம்பர முகவர் நிலைய தரகுக்கு மேலதிகமாக, கடந்த ஒப்பீட்டு ஆண்டின் பொழுது அவர்களது செயற்பாட்டையும் கருத்திற்கொண்டு ஏஎன்சிஎல் இற்குத் தமது பங்களிப்பின் பேரில் மிகச் சிறந்த பத்து விலைப்பட்டியைக் கொண்டுள்ள முகவர் நிலையங்களுக்கு ஓர் ஊக்விப்புத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, போட்டியான பத்திரிகைகள் வியாபார கவர்ச்சிக்கு திருப்திகரமான கழிவுகள் மற்றும் ஏனைய நலன்களுக்கு மத்தியிலும் ஏஎன்சிஎல் வியாபார நலன்களில் உண்மையான கரிசனை செலுத்தியதன் அடிப்படையில் முகவர்நிலைய-தரகு மற்றும் ஊக்குவிப்புத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏஎன்சிஎல் கடன் சேகரிப்பு தொடர்பாக விழிப்புணர்ச்சியுடன் செயற்படுகின்ற அதே வேளை இடர்பாட்டை சமாளிப்பதற்கும் போட்டியாளர்களை எதிர்கொள்வதற்கு வியாபாரத்தை உயிரோட்டமான முறையில் பாதுகாத்துக்கொள்வதற்கும் விவகாரங்களைக் கையாள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடன் காலத்தைத்தாண்டி கடன் வசதிகளை வழங்குதல் தவிர்க்க முடியாததாகும்.

இ) நடைமுறையாக ஆரம்பவைப்பாக கம்பனி ஏழு வாரங்கள் பெறுமதியான புதினப்பத்திரிகைகளை வைத்திருகின்றது. எவ்வாறாயினும் சந்தையில் ஏஎன்சிஎல் பிரசுரங்களின் தற்போதைய நிலைமைக்கேற்ப, ஒவ்வொரு புதிய நியமனங்கள் தொடர்பாகவும் இது சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை, தற்பொழுது கம்பனி புதிய நியமனங்களின் தன்மையில் ஒரு பகுதி கொடுப்பனவாக வைப்புகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

வழங்கல்களின் அதிகரிப்பு, பிரசுரங்களின் எண்ணிக்கை மற்றும் பிரசுரங்கள் உள்ளீடு விலை முதலியவற்றின் காரணமாக வாராந்த வழங்கல்களின் பெறுமதி மாறுபடலாம். ஆகவே எந்தவொரு புதினப்பத்திரிகை பிரசுரிப்பாளரும் நிலையான வைப்பாக, தேவையான வைப்பை நிருவகிக்கக் கூடியதாக இருக்க மாட்டாது. மாதாந்த வைப்பு தவணைக் கொடுப்பனவை உருவாக்குவதன் மூலம் சரியான மற்றும் தேவையான வைப்புகளிடையிலான இடைவெளியாக மிகச் சிறந்த முறையில் குறைப்பதற்கு மிகச் சிறந்த மட்டத்தை எடுத்துள்ளது. ஒரு மாதத்திற்கான சராசரி தவணைக் கட்டணம் (கிட்டத்தட்ட) ரூபா 400,000/- ஆகும். எவ்வாறாயினும் சில புதினப்பத்திரிகை முகவர் நிலையங்களில் வைப்புக் கணக்குகளின் கீழ் மேலதிக வைப்புக்களும் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஈ) புதினப்பத்திரிகை பிரசுரிப்பாளர்களிடையே பரவலான போட்டி காணப்படுகின்றது. ஒவ்வொன்றும் மாற்றவைகளை விட சிறந்து விளங்க முயற்சி செய்து வருகின்றது ஆகவே அதிக வியாபார வாய்ப்புக்களைக் கவர்வதற்கும் வாடிக்கையாளர் அடிப்படையான கம்பனியாக விளங்குவதற்கும் தரகு செலுத்த வேண்டியிருந்தது. பெரும்பாலும் இலத்திரனியல் அரசாங்க விளம்பரம் தற்பொழுது மக்கள் தொடர்பாடல் தகவல் அமைச்சின்கீழுள்ள செல்சினே விளம்பர முகவர் நிலையத்தினூடாக விளம்பரம் செய்துவருகின்றது.

உ) நன்கொடையாளிகளின் செலவு சந்தைப்படுத்தல் செலவினமாக செலவு வைக்கப்படாமல் தொடர்ச்சியாக வருடாந்த பிரசுரப்பகுதிக்கு தவறுதலாக பதிவு செய்யப்பட்டு வந்துள்ளது. இந்த சீராக்கலின் பின்னர் இந்த பகுதி இலாபத்தை ஈட்டி வருகின்றது. இது எதிர்காலத்தில் திருத்தப்படவுள்ளது.

ஊ) பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திருத்தப்பட்ட விளைவு முறை பழைய முறையைப் பின்பற்றுவதன் மூலம் அண்மையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எ) அனுப்பப்பட்ட மற்றும் திரும்பக்கிடைக்கப்பெற்ற தொகைகளை இப்பொழுது பதிவு செய்வதற்குரிய புதிய முறை ஒன்றை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**4.3 செயற்பாட்டு ரீதியான திறமையின்மை**

அ) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) இந்த அபிப்பிராயத்துடன் நாம் இணங்குவதில்லை இந்த ஆண்டு பகுதியில் டிஜிட்டல் அச்சிடல் பிரிவு சாத்தியமான ரூபா 1.5 மில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளது. சம்பளச் செலவு நிறைந்து போகின்ற செலவாகக் கருதப்படுகின்றது இது தொடர்புடையதல்ல.

**4.4 தொடர்ச்சியான தன்மை கொண்ட கொடுக்கல் வாங்கல்**

2012ஆம் ஆண்டில் விளம்பர பன்முகப்படுத்தல் திட்டம் உண்மையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்ச்சியாக நிலைபெற்றிருப்பதற்கு அவசியம் என உணரப்பட்டதனால் அத்துடன் வெளிவாரி கணக்காய்வாளரின் சிபாரிசை நிலைபெறச் செய்கின்ற வகையிலும் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளரின் அங்கீகாரம் இதற்காக பெறப்பட்டிருந்தது. சபை அங்கீகாரம் ஏற்கனவே 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுக்காகவும் பெறப்பட்டுள்ளது.

இலத்திரனியல் மற்றும் அச்சிடல் ஊடகத்திற்கிடையே கடுமையான போட்டி காரணமாக ஆகக் கூடிய வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு ஊக்குவிப்பு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2011இல் பெற்றுக்கொண்ட வருமானத்தை நாம் அடைந்துகொள்ள முடியவில்லையாயினும், கடுமையான போட்டிக்கு மத்தியிலும் நாம் எமது சந்தை பங்கை நிருவகித்து வருகின்றோம்.

ஆகவே, சந்தைப் பங்கை நிருவகிப்பதற்கு, வருங்காலத்தில் கூட நாம் ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டத்தை நாம் தொடரவுள்ளோம். ஊக்குவிப்புக்கொடுப்பனவுத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் எமது வியாபார செயற்பாட்டுக்கு முக்கியமானதாகும்.

**4.5 கைவிடப்பட்ட அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்.**

அ) பிளேட் தயாரித்தல் செயற்பாட்டு தொழில்நுட்பத்தில் மாற்றம் காரணமாக, தகடுதயாரிக்கும் மெசின்கள் பல விற்பனை செய்யப்பட்டுள்ளன, அவ்வாறே முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட மிகப் பழைய மெசின்கூட வருங்காலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஆ) இந்த மிகப் பழைய முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட அச்சிடல் மெசின் விரைவில் விற்பனைக்காக உள்ளன.

இ) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது நாம் ஏற்கனவே சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கு பிரே-ரணைகளைப் பெற்றுள்ளோம்.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அ) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) பிரதான திட்டமாக 7. கல்வி சார் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. அதன் முதலாவது தொகை சரசவிய புத்தக கடைக்கு அனுப்பப்பட்டுள்ளன. சரசவிய புத்தகசாலை தற்பொழுது எம்முடன் விற்பனை செயற்பாட்டுக்காக தொடர்புகளைக் கொண்டுள்ளது. அவ்வாறே மிகுதியாகவுள்ள புத்தகங்களை ஏனைய புத்தக சாலைகளுக்கு அனுப்புவதற்கு நாம் திட்டமிட்டு வருகின்றோம்.

இ) முன்னர் எம்மிடம் 20 அடி டிரேயிலருடனான சுமார் 16 மெ.தொ. ஒரே நேரத்தில் போக்குவரத்து செய்யக்கூடியதான பிரைம் மூவர் இருந்துள்ளது. இந்த வாகனத்தின் கொள்ளளவு போதுமான-தாக இருக்கவில்லை என்பதால் ஒரே நேரத்தில் சுமார் 23 தொன்கள் போக்குவரத்துச் செய்யக் கூடியதான புதிய பிரைம் மூவர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய வாகனம் தற்பொழுது செயற்பாடுகளுக்காக வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

ஈ) i) பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்த முதலீடுகளுக்குச் செய்யப்பட்டவற்றின் செலவு ரூபா 1 மில்லியன் ஆகும் (31.12.13) அன்றுள்ளவாறு ஐந்தொகையில் சந்தைப் பெறுமதி ரூபா 134.4 மில்லியனாக இருந்தது. இந்த நிலைமை இலாப அதிகரிப்பைத் தெளிவாகக் காட்டுகின்றது. பிரேரிக்கப்பட்ட பெறுமதிகளில் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் குறைவான-தாகும்.

ii) ஏற்றுக்கொள்ளபட்டுள்ளது

**4.7 இனம் காணப்பட்ட நட்டங்கள்**

அ) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சுவரொட்டி அச்சிடல் வேலைகளுக்காக ரூபா 43,447 015.00 கம்பனிக்குச் செலுத்த வேண்டியுள்ளது. அப்போதைய பணிப்பாளர் சபை இதனை அறவிடுவதற்கு

சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. எவ்வாறாயினும் சபை மாற்றத்துடன் இந்த வழக்கை வாபஸ்பெறுவதற்கு புதிய பணிப்பாளர்கள் தீர்மானித்திருந்தனர், வரி சட்டங்களுக்கு அமைய கடன் நிலுவை அல்லது அறவிடுவதற்காக நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை நீதி-மன்ற தீர்மானித்தால் மட்டுமே வரி சலுகை பெற்றுக்கொள்ள முடியும். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அதன் சொந்த வழங்குகளை கம்பனி வாபஸ்பெறுகின்ற போது கம்பனி வரி நலன்களை கோர முடியாது, எவ்வாறாயினும் சுவரொட்டிகள் அச்சிடுவதற்கு தேவையானமை போன்ற பத்திரிகை மூலப்பொருட்கள் மீதான VAT உள்ளீடுகள் கோரப்பட்டுள்ளன.

ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**4.8 ஏனைய நிறுவனங்களுக்கு மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களை விடுவித்தல்**

அ) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) ஜனாதிபதி செயலகத்தினால் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய மூன்று அதிகாரிகள் ஜனாதிபதி செயலகம் மற்றும் முதலீடு மேம்பாடு அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**4.9 ஆளணி நிருவாகம்**

அ) 31.08.2010ஆம் திகதிய VRS இற்குப் பின்னர், 107 ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர், நிரந்தரம் (51) ஓய்வு பெற்ற பின்னர், பதவிவிலகல், ஒப்பந்தங்கள் காலவதியாகுதல் போன்றவற்றின் பின்னர், பதவி விலகல் ஒப்பந்தங்கள் காலவதியாகுதல் போன்றவற்றின் பின்னர் ஏற்பட்ட வெற்றிடங்களுக்காக பல்வேறு பகுதிகளில் தேவைகளை நிரப்புவதற்கு (51) நிரந்தர நியமனத்துடன் புதிய ஒப்பந்தம் (56) நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது பணிப்பாளர்களின் ஊழியர்கள் வருடாந்த பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகின்றன.

## 5. பொறுப்புடைமை மற்றும் நல்ல ஆளுமை

**5.1 கூட்டுறவு திட்டம்**

இணங்குவதில்லை, கூட்டுறவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உபாயங்களில் பெரும்பாலானவை அமுல்படுத்தப்படுகின்றன. விஷேடமாக விநியோகத்துடன் தொடர்பாக, சந்தைப்பங்கை அதிகரிக்கச் செய்வதற்கு குறிப்பிட்ட உபாயங்களை நாம் கண்டிப்பாக பின்பற்றி வருகின்றோம். அவ்வாறே 2013இல் விநியோகத்தில் நாம் வளர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளோம்.

**5.2 வருடாந்த செயற்திட்டம்**

செயற்பாட்டு திட்டத்துடன் சிறிய மாற்றங்களைக் கொண்டிருந்த போதிலும், பொதுவான எல்லா செயற்பாடுகளும் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன.

**5.3 கொள்வனவு திட்டம்**

இணங்குவதில்லை, நாம் விஷேடமாக மூலதன செலவினத்தைத் திட்டமிட்டுள்ளோம். அதன் விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**5.4 வரவு செலவு கடப்பாடு**

இணங்குவதில்லை, வேண்டப்படுகின்ற போது நாம் வரவு செலவுத்திட்ட அறிக்கை மற்றும் சரியான அறிக்கைகள் வழங்கியுள்ளோம்.

**5.5 வருடாந்த அறிக்கையை முன்வைத்தல்**

இது தற்பொழுது பிரசுரிக்கப்பட்டு வருகின்றதுடன் பாராளுமன்றத்துக்கு விரைவில் முன்வைக்கப்படவுள்ளது.

# கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பாக தலைவரின் அபிப்ராயங்கள்

**5.6 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

அ) i) வாகனங்கள் பணிப்பாளர்களின் அங்கீகாரத்துடன் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

ii) இணங்குவதில்லை, உங்களது சர்ச்சை இல. 24, மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்வாறு, 2013 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் மாத்திரம் கேள்வி ஊடாக செய்யப்பட்டுள்ளது.

iii) மெஸர்ஸ் லேக் ஹவுஸ் புரொபெர்டி டெவலொப்மன்ட் (பிறைவேட்) லிமிடெட்டிலிருந்து பங்கிலாபம் இல்லாவிட்டாலும் துணைக் கம்னிக்குச் சொந்தமான காணி பலமடிப்புக்களினால் அதிகரிக்கப்பட்டதனால் கணிசமான மூலதன கீர்த்தியைத் திரட்டியுள்ளது.

ஆ) i) அவதானிக்கப்பட்டுள்ளது.

ii) வருடாந்த கொள்வனவுத் திட்டத்தை உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

iii) செலுத்திய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடும்

உங்களால் குறிப்பிடப்பட்ட பகுதிகள் தற்பொழுது மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன அத்துடன் எதிர் காலத்தில் இந்நிலைமை பலப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**பந்துல பத்மகுமார**
**தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்**

# திரட்டிய பரவலான வருமானக்கூற்று

| டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான | குறிப்புகள் | 2013 ரூபா'000 | 2012 ரூபா'000 |
|---|---|---|---|
| வருமானம் | 17 | 3,592,966 | 3,699,667 |
| விற்பனைச் செலவு | | (1,873,215) | (1,993,420) |
| மொத்த இலாபம் | | 1,719,751 | 1,706,247 |
| ஏனைய வருமானம் | 18 | 137,699 | 105,694 |
| | | 1,857,450 | 1,811,941 |
| நிருவாக செலவினங்கள் | | (1,319,986) | (1,289,000) |
| விநியோக செலவினங்கள் | | (325,854) | (323,468) |
| செயற்பாட்டு இலாபம் | 19 | 211,610 | 199,473 |
| நிதி செலவினங்கள் | | (138,537) | (142,044) |
| வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம் | | 73,074 | 57,429 |
| வரி செலவினம் | 20 | (12,094) | (5,781) |
| நியாய பெறுமதி சீராக்கல் | 07 | (2,035) | (59,928) |
| **இவ்வாண்டுக்கான இலாபம்** | | **58,945** | **(8,280)** |
| **தலைமையின் உரிமையாளர்களுக்கு சுமத்தக்கூடிய இலாபம்** | | **58,945** | **(8,280)** |

# திரட்டிய நிதி நிலைமை பற்றிய கூற்று

| டிசம்பர் 31ஆம் திகதி அன்றுள்ளவாறு | குறிப்புகள் | 2013 ரூபா'000 | 2012 ரூபா'000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 06 | 326,537 | 372,570 |
| நீண்ட தவணை நிதிசார் சொத்துக்கள் | 07 | 135,362 | 137,397 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **461,899** | **509,967** |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| பொருட்பட்டியல்கள் | 08 | 455,864 | 439,211 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 09 | 1,038,100 | 998,033 |
| நடைமுறை வரி சொத்துக்கள் | | 25,782 | 37,790 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 10 | 56,967 | 37,646 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | **1,576,713** | **1,512,680** |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,038,612** | **2,022,647** |
| **சமநிலை மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **சமநிலை** | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 11 | 34,837 | 34,837 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | 346,905 | 287,960 |
| **மொத்த சமநிலை** | | **381,742** | **322,797** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக்கள் | 12 | 166,829 | 177,870 |
| கடன் பெறுகைகள் | 13 | 187,132 | 154,983 |
